தமிழ்ப் பொழில்

தஞ்சைக் கரந்தைத் தமிழ்ச்சங்கத் திங்கள் வெளியீடு.

துணர் ௨௧	பார்த்திப—ஆனி—1945—ஜூன்	மலர் ௩

மகிழ்ச்சியும் வாழ்த்தும்.

கரந்தைப் புலவர் கல்லூரியிற் கல்வி பயின்று வித்துவான் முடிநிலைத் தேர்விற்குச் சென்ற மாணவர் அறுவருள் ஒருவர் வித்துவான் முதல் வகுப்பிலும், இருவர் வித்துவான் இரண்டாவது வகுப்பிலும், மற்று மிருவர் மூன்றாம் வகுப்பிலுந் தேர்ச்சி பெற்றுள்ளார்கள். இவ்வைவருள், தமிழவேளால் எம்மிடம் கல்வி பயில ஒப்புவிக்கப்பெற்ற மாணவர் **சிவ. கந்தசாமி** என்பார் ஐந்தாண்டுகளும் நம் கல்லூரியிலேயே முறையாகப் பயின்று வித்துவான் முடிநிலைத் தேர்வில் முதல் வகுப்பில் தேர்ச்சி பெற்றுள்ளார். தமிழவேள் அவர்கள் எம் கரந்தைப் புலவர் கல்லூரியில் முறையாகப் பயின்று, பல்கலைக் கழகத் தேர்விற்குச் சென்று முதல் வகுப்பில் தேர்ச்சிபெற்ற மாணவர் ஒருவரை யான் கண்ணால் பார்த்தபின் மறைவேனாயினுங் கவலை யில்லையென உயிருடனிருந் துரையாடுங்கால் உளங் கசிந்து கூறினார்கள். அவர்களின் வாய்மையுரை பொய்க்காமல் முதன்முதல், தேர்விற்குச் சென்றபொழுதே மாணவர் ஒருவர் முதல் வகுப்பில் வெற்றிபெற்றார். தமிழவேளாவி புகழுடலில் நின்று எம் கல்லூரியையும் ஆசிரியர், மாணவர்களையும் வாழ்த்தியருளுமாக!

வித்துவான் புகுமுக வகுப்புத் தேர்விற்குச் சென்ற 13 மாணவருள் ஒரு மாணவரே தோல்வி யடைந்தார். வித்துவான் நடுநிலைத் தேர்விற்குச் சென்ற மாணவர் பத்தொன்பதின்மருள் 15 மாணவர் தேர்ச்சியடைந் துள்ளனர். இங்ஙனம் எக் கல்லூரிக்கும் இல்லாத சிறப்பு முறையில் எம் கரந்தைப் புலவர் கல்லூரி மாணவர்கள் முதன்மை பெற்று நின்று இம் மண்டிலத்திலுள்ள தமிழ்க் கல்லூரிகளுள் எம் கரந்தைப் புலவர் கல்லூரியே சிறந்த கல்லூரி எனப் பிறர் மதித்தற்குக் காரணராய் இருப்பவர்கள் கரந்தைப் புலவர் கல்லூரி ஆசிரியர்களாதலின் அவர்களைப் பாராட்டுகின்றோம். இவ் வாசிரியர்கள் இடைவிடாது உழைத்து மாணவர்களைப் பயிற்றுவிக்கும் பாங்கு போற்றத்தக்கதாகும். இங்ஙனம் நன் முயற்சியுடைய ஆசிரியர்களின் செயலை மீண்டும் பாராட்டுகின்றோம். வாழியர் கரந்தைப் புலவர் கல்லூரி மாணவர்கள், ஆசிரியர்கள்! வாழி கரந்தைப் புலவர் கல்லூரி என வாழ்த்துகின்றோம்.

கல்லூரி ஆசிரியர்களையும் மாணவர்களையும் அடிக்கடி ஊக்கி, கல்வியிற் கருத்திருத்தும் வண்ணம், தாளாண்மையுடன் பணியாற்றிய கல்லூரித் தாளாளர், **முத்தமிழ்ப் புரவலர்**, இராவுசாகிபு. ஐ. குமாரசாமி பிள்ளை அவர்களின் சீரிய தொண்டு பாராட்டுதற்குரியதாகும்,

சென்னை அரசியலாரின் போருக்குப் பிற்பட்ட சீர்மைசால் பணிகள்.

"சென்னை யரசியலார் சென்னை மண்டிலத்திற் போருக்குப்பின் நிகழ விருக்குந் திட்டங்களை விளக்கி 200 பக்கங்கள் கொண்ட ஒரு நூல் வெளியிட்டுள்ளனர். இந்நூலுள் அடங்கியுள்ள ஐந்தாண்டில் நிறைவேற்றக்கூடிய திட்டங்கள் 1944-ஆகஸ்டில் மேன்மை தங்கிய சென்னைக் கவர்னர் அவர்கள் நிறுவியிருந்த "**போரின் பிற்காலச் சீரமைப்புக் குழுவினரின்**" சிபாரிசுகளை அடிப்படையாகக் கொண்டுள்ளன.

இத்திட்டங்களை நிறைவேற்றுதற்கு நிதி.

போருக்குப்பின் இத்திட்டங்களை நிறைவேற்றத் தொடங்கிப் பணியாற்றும் ஐந்தாண்டிலும் கிடைக்கக்கூடிய நிலவரி முதலியவற்றின் மிகுதித் தொகையும், நிலவரியின் இருப்பு நிதியும், இம்மண்டிலத்தின் பொது மிச்சிற் றொகையும், இந்திய அரசாங்கத்தாரின் உதவி நிதியும், கடன் வாங்குதல் மூலம் கிடைக்கும் நிதியும் ஆக ஐந்து வகையிலும் கிடைக்கும் பொருளின் மூலமாக இத்திட்ட நிறைவேற்றத்திற்குப் பொருள் உதவி செய்யப்பெறும். பயிர்த்தொழில் வருமான வரியில் கிடைக்கும் வருவாயும் இந்த ஐந்தாண்டு வரவு செலவில் சேர்க்கப்பட்டுள்ளது. இத்திட்ட நிறைவேற்றத்திற்கு, எல்லாஞ் சேர்ந்து 142½ கோடி வெண்பொற்காசுகள் கிடைக்குமென எதிர்பார்க்கப்படுகிறது. சில புதிய வரிகளும் விதிக்கப்படலாம்.

புதிய தொழிற்கல்லூரிகள்.

விமானத்தொழில், கப்பற்றொழில், கற்றுக்கொடுக்க ஆந்திரா பல்கலைக் கழகத்தின் சார்பில் கல்லூரிகள் தொடங்கப்பெறும். இராயலு சீமையில் மேலும் ஒரு பொறிப்பயிற்சிக் (Engineering College) கல்லூரி தொடங்கப்பெறும். தெலுங்கு நாட்டில் மற்றுமொரு பயிர்த்தொழிற் கல்லூரி தொடங்கப்பெறும். இப்பொழுதுள்ள கல்லூரிகளில் மிகுதியான மாணவர்கள் சேர்த்துக்கொள்ளப்பெறுவார்கள்.

சென்னையில் பட்டுத்தொழில் சம்பந்தமாகவும், கள்ளிக்கோட்டையில் எண்ணெய் எடுக்கும் தொழில் சம்பந்தமாகவும், கல்லூரிகள் நிறுவப்படும்.

கட்டாயத் தொடக்கக்கல்வி.

கட்டாயத் தொடக்கக் கல்விக்கு ஆசிரியர்களை மிகுதியாக உண்டாக்கும் நோக்கத்தோடு இப்பொழுதுள்ள ஆசிரியர் பயிற்சிக் கல்லூரியை விரிவுபடுத்துவதுடன் அவசியமான சிற்சில இடங்களில் புதிய ஆசிரியர் பயிற்சிக் கல்லூரிகளுந் தொடங்கப்பெறும்.

தொழிற்சாலை வளர்ச்சி.

சென்னையில் தொழிற்சாலைமூலம் இயற்கைப்பொருள் ஆராய்ச்சிக்கழகம் நிறுவப்படும். வடமலையாளம், விசாகப்பட்டினம், திருச்

சிராப்பள்ளி முதலிய மாவட்டங்களில் பீங்கான் தொழிற்சாலைகள் நிறுவப்பட்டுப் பெரிய பெரிய பீங்கான் பொருள்கள் உண்டாக்கப் படும். குடிசைத் தொழிற்சாலையில் விஞ்ஞான அடிப்படையில் ஆராய்ச்சி நடத்த சென்னையில் மைய (Central) ஆராய்ச்சிசாலை நிறுவப்படும். இம் மண்டிலத்தில் கையால், தாள் செய்யுந் தொழிற் சாலைகள் நான்கு நிறுவப்பெறும்.

கால்நடைகளின் வளர்ச்சிக்காக ஆண்டிற்கு 20,000 வெண் பொற்காசுகள் செலவழிக்கப்பெறும்.

மருத்துவக்கோட்டம்.

மாவட்டத்தலைமை மருத்துவக் கோட்டங்களில் விரிவான முன்னேற்ற ஏற்பாடுகள் செய்யப்பெறும். ஒவ்வொரு மாவட்டத்தலைமை மருத்துவக் கோட்டத்திலும் சிறந்த ஒவ்வொரு மருத்துவப் பேரறிஞர், நியமிக்கப்பெறுவர். மின்சாரவிசைமருத்துப் பேரறிஞர், கண் மருத்துவப் பேரறிஞர், காது மருத்துவப் பேரறிஞர், பல் மருத்துவப் பேரறிஞர் நியமனஞ் செய்யப் பெறுவர். இம் மருத்துவத் திட்டங்கள் நிறைவேற்றம் பெற இன்னும் இருபதாண்டுகள் ஆகலாம்."

இங்ஙனம் அரசியலார் அறிவித்துள்ள திட்டங்களில் அறிவு வளர்ச்சியும், கலை வளர்ச்சியும், தொழில் வளர்ச்சியும் பற்றியன வாய்ப் பல்வேறு கலைகளும் வளர்தற்கிடனாயிருக்குந் திட்டங்கள் பல காணப்படுகின்றன வாயினும் இவற்றால் தமிழ் நாட்டிற்கு விளையும் நன்மை யொன்றையும் யாம் கண்டோமில்லை. ஆந்திரர் பல்கலைக் கழகத்தின் சார்பில் விமானத் தொழிற் கல்வி கற்பிக்குங் கல்லூரியையும், கப்பற்றொழிற் கற்பிக்குங் கல்லூரியையும் அமைத்திருத்தல் ஆந்திர நாட்டிற்கு நன்மையேயன்றித் தமிழ் நாட்டிற்கு அக் கல்லூரிகளாற் பெரும் பயன் விளையாதென எண்ணுகின்றேம். இவ் விரு கல்லூரியையும் சென்னைப் பல்கலைக் கழகத்தோடேனும் அன்றி அண்ணுமலைப் பல்கலைக் கழகத்தோடேனும் இணைக்கவேண்டுமெனத் தமிழர்கள் அரசாங்கத்தாரை வேண்டிக்கொள்ள வேண்டுமென வேண்டுகின்றேம். பயிர்த் தொழிற் கல்லூரியும் நம் நாட்டிலேயே இருந்தால் நலம் பல விளையலாம். தமிழ் நாட்டில் கலை வளர வேண்டுமேல் இக் கல்லூரிகளைத் தமிழ் நாட்டில் நிறுவி அரசியலார் தமிழர்கட் காதரவு தரவேண்டுமென வேண்டுகின்றேம். எண்ணெய் எடுக்குந் தொழில் கற்பிக்கும் கல்லூரியையும் கள்ளிக்கோட்டையில் நிறுவாமல் அண்ணுமலைப் பல்கலைக் கழகத்தோடு இணைத்து நிறுவி ஆராய்ச்சித் துறையில் தமிழர்கள் முற்போக்கடைய ஆவன செய்ய வேண்டுமென அரசியலாரை வேண்டிக்கொள்ளுகின்றேம்.

பெரும்பெருந் தொழிற் சாலைகள் தொடங்கப்பெற்றால் வட நாட்டில் தொடங்கப் பெறுதலும், வட நாட்டு முதலாளிகள் முயற்சியுடன் முன்பொருள் செலவழித்து அரசியலார் ஆதரவையும் பெற்றுத் தாங்கள் நன்கு பொருளீட்டி நாட்டு மக்கட்கும் பணியளித்தலும், தமிழ் நாட்டு முதலாளிகள் தொழிற்சாலை நிறுவ வழியறியாராயும் அரசியலா ராதரவுபெறத் தெரியாதாராயும் இருத்தலையும் இவர்களின் இவறன்மாலையராந் தன்மையையும், ஒப்புரவறியா நிலைமையையுங் கண்டு, இந்நாட் டறிஞர்கள் உளம் வருந்தி நின்றனர். இங்ங

னம் வருந்திய அறிஞர்கள் மேலும் வருந்த அரசியலார் இம் மண்டிலப் பொதுப்பணத்தைக் கொண்டு, புதிய புதிய தொழில் கற்றுத்தரத் தொடங்கும் கல்லூரிகளையும் ஆந்திர நாட்டிலும், இராயலு சீமையிலும், கள்ளிக்கோட்டையிலுந் தொடங்குகின்றனர் எனின், தமிழரின் கிளர்ச்சியுற்ற தன்மையை நினைந்து கலை வளர்ச்சியில் தொழில் வளர்ச்சியில் நாட்டமுடைய யாமும் அவர்களுட னியைந்து வருந்தாமல் அரசியலார், தமிழர்களும் தொழிற்றுறையிலும் கலைத் துறையிலும் முன்னேற்றமடைய ஆவன செய்ய வேண்டுமென அரசியலாரை வேண்டிக்கொள்ளுகின்றேம்.

தருமபுரம் ஆதீனத் தலைவர்

இறைவன் றிருவடி நீழ லடைந்தார்.

தருமபுர ஆதீன 24-வது பட்டந்தாங்கித் தலைமை வீற்றிருந்த, திரு. **சண்முக தேசிக ஞானசம்பந்த பரமாச்சார்ய சுவாமிகள்** மே 20-ஆம் நாள், காலை இறைவன் றிருவடி நீழலடைந்தார்கள் என்ற செய்தி கேட்டு மிகமிக வருந்துகின்றோம்.

காலஞ்சென்ற அடிகள் 1933-ஆம் ஆண்டிற்றான் பட்டத்திற்கு வந்தனராயினும், இவராட்சியில் தருமபுர மடத்தில் மாட்சிசால் செயல்கள் சில நிகழ்ந்தன என்பதனை அறியாதார் யார்? தருமபுர மடத்தின்கீழ் அமைந்த நிறுவனங்களின் நிதி, ஆட்சிநிலைமை உயர்ந்து விளங்கக் காரணராய் நின்றவரும் அடிகளே யாவர். தருமபுரத்தில்மிகச் சிறந்த ஒரு நூனிலையத்தை நாட்டியுள்ளார்கள். பள்ளிக்கூடம் நாட்டிச் சிறுவர்களின் கல்வி வளர்ச்சிக்காவன செய்தார்கள். ஆதித் திராவிடர்கட்குக் குடிநீர் வசதியும் பிற நலனும் பெருகப் பணியாற்றினார்கள். "ஞானசம்பந்தம்" எனப் பெயர் தாங்கிய ஒரு திங்கள் வெளியீட்டையும் வெளியிட்டுச் சமயவளம் பேணினார்கள். பத்தாண்டாட்சிக் கொண்டாட்டத்தைத் திறம்பெற நடத்தினார்கள். மெய்கண்டான் சைவ சித்தாந்த மாநாடு கூட்டி அறிவு விருந்தளித்தார்கள். பரம்பரைச் சைவர்களுக்குமட்டுமென ஒரு கல்லூரியைத் திருவாவடுதுறையாதீன மடத் தலைவருட னியைந்து நின்று நாட்டினார்கள். இத்தகு நற்பணிகளிலெல்லாம் நாட்டஞ் செலுத்திப் பணியாற்றிவந்த அடிகளின் நல்லுயிர் இறைவன்றிருவடி நீழலில் இன்புற்றுத் திளைக்க இறைவனை வழுத்துகின்றோம். இவ்வடிகளிருந்த தலைமைத் தானத்தில் இதுபோது வீற்றிருக்கும் அடிகள் திரு. **சுப்பிரமணிய தேசிக பரமாச்சாரிய சுவாமிகளாவார்கள்**. இவ்வடிகள், நிரம்பிய தமிழ்ப் புலமையும் வட மொழிப் புலமையும் படைத்தவர்கள். இவர்கள் தமிழாக்கம் பெருக்கித் தக்கோர் போற்றத் தலைமையிற் சிறந்து விளங்கவேண்டி இறைவனை வணங்கி வாழ்த்துகின்றோம்.

இங்ஙனம்,
பொழிலாசிரியர்.

“பெயர் நிலைக் கிளவி”

வித்துவான். ந. ஆறுமுகன் அவர்கள், சிவஞான பாலைய சுவாமிகள்
தமிழ்க்கல்லூரி, மயிலம்.

தொல்காப்பியத்திற்கு உரைகண்ட ஆசிரியர்கள் பலராவர். அவர்கள், தாம் உரை யெழுதுங்கால் சிற்சில இடங்களில் பொருளை விளக்கிச் செல்லாது அதற்கு ஓர் குறிப்பை மட்டும் வெளியிட்டுச் செல்கின்றனர். அக்குறிப்பைப் பலர் பலவிதமாகத் தம் மனத்துட் கொண்டு இடர்ப்பட நேரிடுகின்றது. (அதற்கு ஓர் உதாரணம்) தொல்காப்பியம் சொல்லதிகாரத்தில், “பெயர்நிலைக் கிளவி காலந் தோன்றா—தொழினிலை யொட்டு மொன்றலங் கடையே” என்னும் சூத்திரத்தின் ‘பெயர்நிலை’ என்ற தொடருக்கு உரையாசிரியர் சேனாவரையர் “பெயராகிய நிலையை யுடையது பெயர்நிலை யென அன்மொழித்தொகை-பெயர்—பொருள்” என்று குறித்துச் செல்லுகின்றார். இங்கே பொதுவாக அன்மொழித்தொகை என்று குறித்தனரே யொழிய, அது அவ்வாறாதல் யாங்ஙனம் என்று விளக்கினாரில்லை. ஆகவே ஈண்டு நாம் ஆராயவேண்டுவது ‘பெயர்நிலை’ என்ற தொடர் அன்மொழியாவது எப்படி? என்பதேயாகும்.

“பெயர்நிலைக்கிளவி” என்ற சொற்றொடரால் உணர்த்தப்படும் பொருள் ‘பெயர்ச்சொல்’ என்பதேயாகும். இது இங்ஙனம் நிற்க அன்மொழித்தொகை என்றால், வெளிப்பட்டன போக ‘அல்லாத மொழி ஒன்று தொக்கிருக்கவேண்டுமன்றோ? அம் முறைபற்றி நோக்குவோமாயின் “பெயர்நிலை” என்றதில், ‘நிலை’ என்ற சொல்லுக்கும் ‘கிளவி’ என்ற சொல்லுக்கும் இடையில் ஒரு மொழி தொக்கிருக்கவேண்டும். அம்மொழி யாதாயிருக்கலாம் என்பதே நாம் ஆராயவேண்டியது. அங்ஙனம் ஆராயுங்கால் மேலே முடிவுசெய்தபடி ‘பெயர்நிலைக்கிளவி’ என்ற தொடர் முழுமையாலும் உணர்த்தப்படுகின்ற ‘பெயர்ச்சொல்’ என்ற பெரருளுக்குக் குற்றம் வராமல் ஆராயவேண்டும். ஏன் என்றால் நம் ஆராய்ச்சிக்காக வேண்டி ஆசிரியரால் குறிக்கப்பட்ட பொருள் மாறுபடலாகாதன்றோ?

“பெயர்நிலை” என்றால், “பெயராகிய நிலையை யுடையது” என்பதே பொருள். அதன்மேல் ‘உடையது எது?’ என்ற வினாவிற்கு விடை காண்போமானால் ‘உடையது பெயர்’ என்றும், ‘உடையது பொருள்’ என்றும் பெறலாம். (இவற்றின் விளக்கம் பிறகு காண்போம்.) ஆனால், ‘உடையது சொல்’ எனக் கூறுதல் ஒரு சிறிதும் அமையாது. ஏனெனில், ‘சொல்’ என்பதை யுணர்த்தும் ‘கிளவி’ என்றதொரு சொல் வெளிப்படையாக அடுத்து, “பெயர்நிலைக் கிளவி” என நிற்றலின் என்க. அவ்வாறாயின், ‘பெயர்நிலைக்கிளவி’ என்பதற்கு “பெயராகிய நிலையையுடைய சொல்” எனக் கிடக்கை முறையான் (அன்மொழித்தொகையாலன்றி) வெளிப்படையாகப் பொருள் கொண்டாலே ‘பெயர்ச்சொல்’ என்பது போதரலின், அன்மொழித்தொகை யெனல் வேண்டாவெனின்—அற்றன்று. ‘பெயர்ச்

சொல்' எனலே ஆசிரியர் கருத்தாயின் "பெயர்க்கிளவி" என்றே கூறுவர்; "பெயர்நிலைக்கிளவி" என்று, பயன் வேண்டாது, சொற் பெருக்கிக் கூறமாட்டார் என்க. அங்ஙனமெனின், அவர் கருதிய பயன் யாதோவெனின்? "பொருளை யுணர்த்தும் பெயர்ச்சொல்" எனப் பெயர்ச்சொல் பொருளை யுணர்த்தும் என்று பொது இலக் கணங் கோடலே பயன். எனவே 'பெயர்நிலை' என்பதை அன் மொழித்தொகையாகப் பொருள் பண்ணுமிடத்து 'பெயர்ச்சொல் பொருளை யுணர்த்துவது' என்ற இலக்கணமும் அமையவேண்டும் என்பதாயிற்று.

இனி, 'உடையது பெயர்' என்ற பொருளுக்கு உண்மை காண் போம். 'பெயர்' என்பதற்குச் சேனுவரையர் 'பொருள்' என்றுரை யெழுதிக் காட்டுவதால் 'பெயர்' என்பதைப் பொருளாகக்கொண்டு, 'பெயர்நிலை' என்பதற்குப் "பொருளாகிய நிலையை யுடையது" எது? பெயர், என்று கொள்ளின், 'பொருளை யுணர்த்துவது' என்ற இலக்கணமும் அமைந்துவிடுகிறது. எனவே, தொக்கிருக்கும் அன் மொழி 'பெயர்' என்று கொள்வது பொருத்தமன்றோ வெனின், அது வும் அமையாது. 'பெயர் என்ற வெளிப்படைச் சொல்லுக்கே 'பொருள்' என்று கொண்டு "பொருளை யுணர்த்தும் நிலையை யுடைய பெயர்" எனக் கொண்டால் அப்பொழுதும் 'தொக்க அன் மொழியால்' இவ்விலக்கணம் பெறப்பட்டதன்றாயிற்று. ஆகவே சொற்பெருக்கிக் கூறப்பட்ட 'தொக்க அன்மொழியால்' ஒரு பய னும் இலதாயிற்று. அங்ஙனம் அவர் பயனின்றி 'அன்மொழித் தொகை' எனக் கூறார் என்பதை மேலே அறிந்தோம்.

இனி, 'பெயர்' என்பதற்கு உரை 'பொருள்' தானே? என் னின் அதுவும் பொருந்துவதன்று. 'பெயர்' என்பதற்கு நேரான பொருள், "ஒரு பொருளை யுணர்த்துவது எதுவோ அது பெயர்" என்பதேயாகும். என்னெனின், வினையையும், இடையையும், உரி யையும் உணர்த்தும் சொற்களை வினை, இடை, உரி என்று வழங்கு வதுபோல 'பொருளை யுணர்த்தும் சொல்லை' 'பெயர்' என்று வழங் கியவாறும். ஆகவே 'பெயர்' என்பது 'சொல்லை' யுணர்த்தும் அன்றிப் 'பொருளை' யுணர்த்துவது யாண்டும், எக்காலத்தும் இல்லை. அவ்வாறாயின் சேனுவரையர் 'பெயர்' என்பதற்குப் 'பொருள்' எனக் குறித்தல் பொருத்தமின்றோ வெனின், அவர் அங்ஙனம் குறித் தலும் நேரான பொருள் என்பதற்காக வன்று. 'பெயர்நிலை' என்ற விடத்துப் 'பொருள்' என்பதைத் தொக்க அன்மொழியாகக் கொண் டாலே அவ்வாறு பொருள் கொள்ளலாம் என்பதற்காகவே. 'பொருள்' என்பதை அன்மொழித்தொகையாகக் கொண்டால்தான் அவ்வாறு பொருள் கொள்ளலாம் என்பாராயின் 'பெயர்நிலை' என்ற தொடர் முழுமைக்கும் அன்றோ 'பொருள்' என்று உரை யெழுத வேண்டும் எனின், தாழ்குழல்' என்பது அன்மொழித்தொகையே. இவ்விடத்து உரையாசிரியரோ அன்றிப் போதகாசிரியரோ பிறர்க்கு எடுத்து உணர்த்துங்கால் 'குழல்' என்பதை இயற்பெயராகக் கொள் ளற்க என்பான்வேண்டி 'குழல்—பெண்' என்றெழுதினுலோ அல் லது கூறினுலோ அதுபற்றிக் 'குழல்' என்றாலே 'பெண்' எனக் கொள்ளல் அமையுமோ. அது போலாம்.

மற்று, 'தாழ்குழல்' என்றவிடத்து 'குழல்' என்பது, அன்மொழித்தொகையாகிய 'பெண்' என்பதை அடுத்துப் பின்மொழியாகி நிற்கப் "பெயர்நிலை" என்றவிடத்துப் 'பெயர்' என்பது அன்மொழித்தொகைச் சொல்லாகிய 'பொருளை' யடாது, முன்மொழியாகி நிற்கின்றதே என்று வினவலாம். அன்மொழித்தொகைச் சொல்லுக்கு 'சிறந்து நிற்கும் சொல்' முன்னும் நிற்கலாம். பின்னும் நிற்கலாம். அம்முறையில் இது முன்னின்றது. 'தாழ்குழல்' என்றவிடத்து 'பெண்' என்ற அன்மொழித்தொகைச் சொல்லுக்கு 'குழல்' என்ற சொல் சிறந்து பின் னின்றது. அதுபோலவே 'பெயர்நிலை' என்றவிடத்துப் 'பொருள்' என்ற அன்மொழித் தொகைச் சொல்லுக்குப் 'பெயர்' என்றது சிறந்து முன் னின்றது.

'பெயர்' என்பதற்குப் 'பொருள்' என்று உரை கொண்டது அன்மொழித்தொகைப் பொருளாலேயாம் என்பதற்காகவே சேனுவரையரும் 'அன்மொழித்தொகை' என்பதை முன்னர்ப் பெற வைத்துப் பின்னர் 'பெயர்—பொருள்' என்று உரை யெழுதுகின்றார்.

இனி, 'பெயர்' என்பதற்குப் 'பொருள்' என்றே உரை இருப்பதாக வைத்துக்கொண்டாலும், 'பெயர்நிலை' என்பதை அன்மொழித் தொகையாகக் கூறலமையாது. எவ்வாறெனிற் காண்குதும். 'பெயர்' என்பதற்குப் 'பொருள்' என்றே உரைகொண்டுவிட்டால், 'பொருளாகிய நிலையையுடைய கிளவி' எனக் கிடக்கைமுறையால் வெளிப்படைப் பொருள் கொண்டாலும் 'பெயர்ச்சொல்' எனக் கொள்ளக் கிடக்கின்றது. அன்மொழித்தொகை யெனக் கூறவேண்டியதில்லை. சீதையைக் குறிப்பதற்குத் 'தாழ்குழல் மங்கை' என்று கூறுவதாக வைத்துக்கொள்வோம். இவ்விடத்தே, தாழ்ந்த குழலினை யுடையாளாகிய சீதை' என அன்மொழித்தொகையாகக் கொண்டு, பின்பு 'அச் சீதையாகிய மங்கை' என்று பொருள் கொள்வோரில்லை. அன்மொழித்தொகையின்றி, 'தாழ்ந்த 'குழலினையுடைய மங்கை' என்று நேராகப் பொருள் கொண்டாலே (அதிகாரப்பட்டமையான்) சீதை யென்று கொள்ளப்படும். அதுபோலவே, 'பெயர்நிலைக்கிளவி' என்றவிடத்துப் 'பெயர்—பொருள்' என்று கொண்டால், 'பொருளாகிய நிலையையுடைய பெயர்' என அன்மொழித்தொகைப் பொருள் கொண்டு, பின்பு 'அப் பெயராகிய சொல்' எனப் பொருள்கொள்ள வேண்டியதின்று. அன்மொழித்தொகையின்றி நேராகப் பொருள் கொண்டாலே அதிகாரப்பட்டமையான் 'பெயர்ச்சொல்' என்பது கொள்ளப்படும் (ஈண்டு அதிகாரப்பட்டமையாவது வேற்றுமை யியலில் பெயர்ச்சொல்லின் இலக்கணங்களைக் கூறுதலை. இச் சூத்திரத்தும், 'காலந்தோன்றாமை' பெயருக்கே இலக்கணம்) சொல் என்பது, பெயர், வினை, இடை, உரி என்பனவற்றிற்குப் பொதுவாகி நிற்றலாற் பொதுச் சொல். அவற்றுள் பெயர் ஒரு கூறுமாதலின் சிறப்பாயிற்று. ஆகவே அன்மொழித்தொகைச் சொல் 'பெயர்' என்றலும் பொருந்துவதன்றாயிற்று.

இனி, மூன்றாவதாக 'உடையது பொருள்' என்பதற்கு உண்மை காண்போம். "பெயர்நிலைக்கிளவி" என்பதற்குப் "பெயராகிய நிலையை யுடைய பொருள்" 'அப்பொருளை யுணர்த்தும் கிளவி'

எனக் கொண்டால் 'பெயர்ச்சொல் பொருளை யுணர்த்துவது' என்ற இலக்கணத்தையும் பெற்றுவிடலாம். பெயர் என்பதற்குப் பின்பே 'பொருள்' என்றுரை எழுதுவதற்கும் பொருந்துவது என்னலாம்.

"பெயராகிய நிலையை யுடைய பொருள் எனவே 'வேறு நிலையை யுடைய பொருளும்' உண்டோ? என்னின், ஆம் உண்டு. நடத்தல், வருதல், உண்ணுதல் என்றற் றொடக்கத்துச் சொற்களெல்லாம் தொழிற்பெயர் என்று சொல்லப்படும். இவற்றிற்குப் பொருள் யாதெனின் "வினையாகிய நிலையையுடைய பொருள்"தான். எனவே 'வினைப் பொருண்மையை யுடைய தொழிற்பெயர், பெயர்ப் பொருண்மையையுடைய பொருட்பெயர்' என இரண்டுள்ளன. அவற்றுள், சாத்தன், கொற்றன், அவன் என்றற் றொடக்கத்தன வற்றை வேறு பிரித்தற்கே "பெயர்நிலைக்கிளவி" என்றார். நடந்தான், வந்தான் என்பனவற்றிற்கும் வினைப்பொருண்மை யுண்டே னும், அவை 'வினை' என்று கூறப்படுவதல்லது 'பெயர்' என்று கூறப்படாமையின் அவற்றைப்பற்றி யீண்டாராய்ச்சி யின்றென்க.

நடந்தான், வந்தான் என்பனவற்றையே "வினையாலணையும் பெயராக"க் கொள்ளுமிடத்து 'பெயர்ப் பொருண்மையை' யுணர்த் துவதால், அவை "பெயர்நிலைக்கிளவி" என்பதனுள் அடங்காவோ வெனின் அவையும் பெயர்ச்சொல்லாமாயினும், அவை வெளிப்படை யாகக் காலங் கொள்ளுதலின் "காலந் தோன்றும் பெயர்நிலைக்கிளவி களுள்" அடங்கா வென்க. அதுபற்றியே ஆசிரியரும் "தொழில்நிலை யொட்டும் ஒன்றலங் கடையே" என்று விலக்கியவாறும்.

ஆகவே, முடிபாக நாம் கொள்ளுவது, 'பெயர்நிலை' என்பது, 'பெயராகிய நிலையையுடைய பொருளுக்காயிற்று. ஆதலின் தொக்க அன்மொழிச்சொல் 'பொருள்' ஆயிற்று என்பதே.

எனவே, உரையாசிரியர்கள் ஒன்றனை விளக்காது குறிப்பிட்டுச் செல்வதும் ஒரு பயன் நோக்கியே என்பது புலப்படும். என்னெனின், மாணுக்கர்களுக்கு உணர்வு பெருகல்வேண்டி வெளிப்படக் கூறாது 'உய்த்துணர வைத்தல்' அவர்க் கியல்பாகலான் என்க.

அண்ணுமலைப் பல்கலைக் கழகத்தின் ஓராண்டுத் தமிழ் இசை வகுப்பு.
(Tamil Music Certificate Course.)

இவ்வகுப்பு ஒரு வருடம் நடைபெறும். சங்கீத பூஷணம் தேர்ச்சி பெற்றவர்களும் அல்லாதவர்களுள் பல கீர்த்தனைகள் பாடஞ் செய் திருப்பதோடு கீர்த்தனைகளுக்குச் சுரம் பாடவும் சிறிது இராக ஆலா பனை செய்யவும் கூடியவர்களும் ஆகிய ஆண்களும் பெண்களும் இவ் வகுப்பிற் சேரலாம். அவர்களுள் ஏழையாயிருந்தால் ஓரளவு பொருள் உதவி (stipend) செய்யப்படும். சேர விரும்புகிறவர்கள் 1945, ஜுன் மாதம் 30-ம் தேதிக்குள் ரிஜிஸ்ட்ரார் அவர்கட்கு மனுச் (application) செய்யவேண்டும்.

இங்ஙனம்,
பண்டித, வித்துவ. லெ. ப. கரு. இராமநாதன் செட்டியார்,
அமைச்சர்.

சென்னை மாகாணத் தமிழ்ச் சங்கச் சார்பில்
கரந்தைத் தமிழ்ச் சங்கத்தில் நிகழ்ந்த

தமிழ்ப் புலவர் மாநாட்டின் தலைமையுரை

காலஞ்சென்ற கா. சுப்பிரமணிய பிள்ளை M. A., M. L., அவர்கள்.

தமிழ்க்கலையை மறைவினின்றும் மீட்டு வளர்க்கும் புலவர் நிலையமாய் விளங்கும் இக் **கரந்தைத் தமிழ்ச்சங்கத்தி** னுதரவில் புலவர் மாநாடு கூட்டப்படுவது மிகவும் பொருத்தமாகும். சிறந்த புலவர்கள் நடுவிலிருப்பதாற் புலமை யொளி வீசப்பெறும் பேறு கிடைப்பதைக் கருதியே இம்மாநாட்டிற்குத் தலைமை தாங்க இசைந்தேன். புலவர் என்ற சொல் அறிவுடையவர் எனப் பொருள்படும். அறிவை வளர்ப்பவரும் புலவரே. அறிவுடையார் எல்லா முடையார். பல் வகைப்பட்ட அறிவுத் துறைகளில் தலைசிறந்து விளங்கும் புலவர்களாலேயே உலகமானது மேன்மை யடைகின்றது. நற்புலவர் கூறும் அறிவு வழியிலே செல்வம் பயன்படுமானல் அதன் சிறப்பு இனிது விளங்கும் ஆதலால் செல்வர்கள் அறிவுடையவர்க்குத் துணையாகவும் அமைந்து வாழும் வாழ்க்கையே நாகரிக வாழ்க்கை யெனப்படும். புலவர் காட்டுகின்ற உயிர்நெறியிலே செல்வரும் பிற மக்களும் செல்வராயின் குற்றமற்ற பெருநலம் விளையும். பல கலைகளின் சார்பாகப் பலவகைப் புலவர்கள் இயற்றி யீந்த அறிவுக் களஞ்சியமாகிய நூல்களே ஒரு நாட்டின் அழியாச் செல்வமாகும்.

புலவர்கள் பெருமையும் பயனும் பண்டைத் தமிழ்ப் புலவர் வரலாறுகளால் தெற்றெனப் புலப்படும். இயற்றமிழ்க்கலை, இசைக்கலை, நாடகக்கலை, மொழிக்கலை, மருத்துவக்கலை, சோதிடக்கலை, நிறைமொழிக்கலை, வானநூற்கலை முதலிய பல கலைகளிலும் தமிழ்ப்புலவர்கள் சிறந்து விளங்கினர். நால்வகை யுறுதிப் பொருள்களையும் இனிது பயக்கும் அரிய நூல்களை அவர் இயற்றியுள்ளார். எல்லா மக்களையும் ஒற்றுமைப்படுத்தும் விரிந்த கொள்கைகளையும் பயன் கருதா தொழுகும் நல்லொழுக்க முறையினையும் கல்வியின் தனிச் சிறப்பையும் கற்பன கற்றுக் கற்றுங் கொழுகும் மெய்ந்நெறியினையும் பண்டைத் தமிழ்ப் புலவர்கள் உலகிற்கு அறிவுறுத்தினர். அவர்கள் தமது பெருமையினுல் நாட்டினராலும் அரசராலும் பெருமதிப்பு அடைந்து விளங்கினர். இயற்கை நுட்பங்களை நேரில் கண்டு இனிய பாக்களில் அவற்றை யமைத் துதவினர். அவர் வாழ்க்கையி னியல்பு புறநானூறு என்னும் அரிய சங்க நூலிற் செவ்விதிற் காணப்படும். இதனைச் சில வெடுத்துக்காட்டுகளால் இங்கே விளக்குவாம்.

எல்லாக் குலத்திலும் புலவர்கள் தோன்றினர், ஆடவருள்ளும் மகளிருள்ளும் பல புலவர்கள் விளங்கினர். கபிலர் அந்தணர். அறிவுடை நம்பி, கிள்ளிவளவன், பாலையாடிய-பெருங்கடுங்கோ முதலியோர் அரசர். கணியன் பூங்கொன்றனர் சோதிடம் வல்லார். தாமோதரனர் மருத்துவனர். கிழார் என்னும் பட்டத்தை யுடையவர் வேளாளர். இளவெயினி குறமகள். வெண்ணிக்குயத்தி

யார் குயப்பெண். காரிக்கண்ணனார், வணிகர். இளம்பொன் வணிகர், தட்டார். எயிற்றியனார் வேடப் பெண்டிர். கண்ணம்பூதனார், ஆயத்தனார் ஓலைக்கடை வணிகர். பெருஞ்சாத்தனார் நாணயப் பரிசோதகர். சீத்தலைச்சாத்தனார் கூலவாணிகர். தமிழ்க்கூத்தனார் கூத்த மரபினர். இவை விரிக்கிற் பெருகும்.

அக்காலத்துப் புலவர்கள் எப்பாலராயினும் எக்குலத்தாராயினும் பேரரசர்களாலும் குறுநில மன்னர்களாலும் பிறராலும் பெருமதிப்புப் பெற்று விளங்கினர். தஞ்சைமாநகருக் கடுத்த வெண்ணிலென்னும் சிற்றூரில் குயவர் மரபிற் பிறந்த பெண் புலவரொருவர் சோழர் பெருமன்னனாகிய கரிகால் வளவனை நோக்கி, வெற்றி பெற்ற உன்னைப்பார்க்கிலும் புறப்புண்நாணி வடக்கிருந்த சேரலாதன் சிறந்தவனென்று கூறினர். குலத்தாலும் பாலாலும் தாழ்மையாகக் கருதப்படு மிவர் பெருமன்னனைக் கண்டித்துரைக்கும் உரிமை பெற்றமை காண்க. கோப்பெருஞ்சோழன் தன் மக்களோடு போர் புரியக் கருதியகாலை அவனை அவ்வாறு செய்யாவண்ணம் தடுப்பதில் புல்லாற்றூர் எயிற்றியனா ரென்னும் புலவர் வெற்றி பெற்றார். பகையரசர் மக்களைக் கொல்லக் கருதிய கிள்ளி வளவனை அவ்வாறு செய்யாவண்ணம் தடுத்ததும், பரிசில் கேட்கப் புகுந்த இளந்தத்த னென்னும் புலவனை யொற்றனென்று கொல்லக் கருதிய நெடுங்கிள்ளியை அவ்வாறு செய்யாமல் தடுத்ததும் கோவூர் கிழார் என்னும் பெரும்புலவரே. மூவேந்தரும் தம்முள் ஒற்றுமையாயிருத்தல் வேண்டுமென்பது அக்காலத்திய புலவர்களது விழுமிய கருத்தாகும்.

காவிரிப்பூம்பட்டினத்துக் காரிக்கண்ணனார், குராப்பள்ளித் துஞ்சிய பெருந்திருமாவளவனென்னும் சோழனையும், வெள்ளியம்பலத்துத் துஞ்சிய பெருவழுதியையும் நோக்கி, "நீங்கள் உடனிலை திரியீராயின் இமயத்தில் உங்கள் கொடிகளை நிலைநாட்டுவீ" ரென்று இயம்பினர்.

அக்காலத்தில் வருணவரம்பு பற்றிய கொள்கைகள் நிலைபெறவில்லை. கௌணியன் விண்ணந்தாய னென்னும் செல்வப் பார்ப்பான், வேள்விக் காலத்தே வேளாளப் புலவராகிய ஆவூர் மூலங்குடி கிழாருக்கு வளமான பரிசில்களை யளித்தான். இதனால் பார்ப்பார் பிறமரபினர்க்கு ஈதற்கு உரியாரென்னும் கொள்கை அக்காலத்தில் நிலவினமை காண்க. அதியமானுக்காகத் தொண்டைமானிடம் தூது சென்றவர், ஔவை யென்னும் பாண்புலவராவர். "ஓதலும் தூதுமுயர்ந்தோர் மேன" என்றவிடத்து உயர்ந்தோரென்பது கல்வியி லுயர்ந்தவரேயாம் என்றுணர்க.

புலவரால் பாடப்படுதலைப் பெரும்பேறாக அரசர் மதித்தனர். தலையாலங்கானத்துச் செருவென்ற நெடுஞ்செழியன் தன் பகைவரை வெல்லுதலைப்பற்றி வஞ்சினங் கூறியகாலை, தான் வெற்றி பெறுவிடின், "மாங்குடி மருதன் தலைவனாக, உலகமொடு நிலைஇய பலர் புகழ் சிறப்பிற் புலவர் பாடாது வரைக வென்னிலவரை" என்றான். மாங்குடி மருதனாரைத் தலைவனாகக் கொண்ட புலவர் கழகம், அவனால் பேணப்பட்டதென்பது இதனாற் போதரும்.

அரசர்கள் புலவர்களைத் தம்மினும் அதிகமாக மதித்துத் தொண்டு செய்தும், பெறலரும் பொருள் கொடுத்தும், பாடியும், தமது அன்பினைக் காட்டினர். சேரமான் பெருஞ்சேரலிரும் பொறை பிறர் ஏறக்கூடாத முரசு கட்டிலில் துயின்ற மோசிகீரனு ரென்னும் புலவர்க்கு அவர் துயிலெழுந்துணையும், கவரிகொண்டு வீசினன். பெறு தற்கரிய அருநெல்லிக்கனியை அதியமான் தான் உண்ணாது ஔவை யாருக்கு விரும்பிக் கொடுத்தான். அரசிழந்த குமணன் பெருந்தலைச் சாத்தனார்க்குத் தன் தலையைக் கொள்ள வாள் கொடுத்தான். குள முற்றத்துத் துஞ்சிய கிள்ளிவளவனென்ற சோழ மன்னன் சிறுகுடிகிழான் பண்ணனென்னும் வள்ளற்புலவனைப் பாடியவிடத்துத் தன்னை அவ னுக்குப் பரிசிலன்போலப் பாடினன். பதிற்றுப்பத்திலுள்ள ஓர் சேர மன்னன் தன்னைப் பாடிய பரணருக்குத் தன் புதல்வனைப் பரிசி லாகக் கொடுத்தான். பிற்காலத்திலும் அநபாய சோழ மன்னன், சேக்கிழார்க்குக் கவரி வீசினன். இரண்டாங் குலோத்துங்கன் ஒட் டக்கூத்தரின் திருவடியைத் தன் தலைமேற் சூடும் மாணுக்கனுகத் தன்னைப் பாடினன். பிறவு மன்ன.

ஒவ்வொரு குறுநில மன்னர் அல்லது முடிமன்னர் ஒவ்வொரு புலவரைச் சிறப்பாக ஆதரித்ததாகத் தெரிகிறது. சேர மன்னர் கபி லர், பரணர் முதலிய பெரும் புலவர்களை யாதரித்தமை பதிற்றுப்பத் தால் இனிது விளங்கும். நூறுயிரக் கணக்கான பொன்னும், பெரு நாடும், அரசர்கள் புலவர்க் கீந்தமை அதனுற் பெறப்படும். பாரி கபி லரையும், அதியமான் ஔவையாரையும், ஆய், முடமோசியாரையும், கண்டீரக்கோபெருநள்ளி வன்பரணரையும் சிறப்பாக ஆதரித்தவ ராவர். ஆதரித்த வள்ளல்களின் இல்லறச் செய்திகளில் அவர்கள் நன்மையின்பொருட்டுப் புலவர்கள் தலையிட்டனர். பேகனை அவன் துறந்த கண்ணகியோடு கூட்டுதற்குப் பரணர் முதலிய புலவர்கள் முயன்றமை தெளிவு. பாரி மகளிரை மணம் முடித்து வைத்தற்குக் கபிலர் முயன்றனரென்பது அறிஞர்கள் அறிந்ததே.

அரசர் புலவர்களுடன் பெருநட்புக் கொண்டமையும், புலவர் அரசர்களோடு உயிர் துறந்தமையும், பிசிராந்தையார், பொத்தியார் முதலியவர்களது வரலாற்று னினிது விளங்கும். பிற்காலத்துப் பொய்யாமொழிப் புலவரது வரலாற்றிலும் அதன் உண்மை காணப்படும்.

அக்காலத்துப் புலவர்களின் தன்மையை நோக்குமிடத்து அவர்கள் உள்ளதை யுள்ளவாறு உரைக்கும் இயல்பும், அறவொழுக் கமும், விழுமிய கொள்கையும், தன்மதிப்பும் உடையவர்களாய்த் திகழ்ந்தனர். தன் மதிப்பைக் குறிக்கும் அவர்கள் சொல்லும் செய லும் புறநானூற்றிலினிது காணப்படும். "முற்றிய திருவின் மூவ ராயினும், பெட்பின்றீதல் யாம் வேண்டலமே" என்றூர் பெருந்தலைச் சாத்தனூர். அதியமான் பரிசில் நீட்டித்தபொழுது, "எத்திசைச் செலினும் அத்திசைச் சோறே" என்று கூறி அவனைப் பிரிந்து சென் றனர் ஔவையார். முயற்சியுடைய புலவர்க்கு, "பெரிதே வுலகம் பேணுநர் பலரே" என்றூர் பெருஞ்சித்திரனூர். பரிசில் போதிய அளவு கொடாத குறுநில மன்னன் ஒருவனுக்கு, தாம் பகடொன் றினைப் பரிசிலாக அளித்துச் சென்றவரும் அவரே. பெருந்தலைச்

சாத்தனார் என்னும் புலவர் ஒருங்கிருந்த. ஈரரசர்களி லொருவனைத் தழுவி மற்றொருவனைத் தழுவாதிருந்தகாலை, தழுவப்படாத மன்னன் தன்னைத் தழுவாமைக்குக் காரணம் வினவ அவர் அவனுக்கு விடை கூறிய பாட்டின்கண், "**பாடுநர்க்கடைத்த கதவினுடுமழை அணங்குசா லடுக்கம் பொழியுநும், மணங்கமழ் மால்வரை வரைந்தன ரெமரே**" (புறம் 151) என்றார். இதனால் பாடுநர்க்கு வழங்காத மன்னர்பாற் செல்வதைப் புலவர் பலர் ஒருங்கு விடுத்தன ரென்பது புலனாகின்றது. **புலவர்க்குள்ள ஒற்றுமையும் இதனா லினிது விளங்கும்.**

பொருளின் நிலையாமையும், அறத்தின் செம்மையையும் பேணுவார் வண்மையும் குறிக்கொண்டு சில புலவர்கள் தாம்பெற்ற செல்வத்தைத் தாராளமாகச் செலவழித்து வாழ்க்கை நடத்தினர். கூல வாணிபம், அறுவைவாணிபம், உழவு முதலிய தொழில் நடத்தினோரும், அரசருட் புலவரும், வறுமையால் வருந்தவில்லை. இசைக்கலை வல்ல பாணரும், கூத்திற் சிறந்த கூத்தர் பொருநர் முதலியோரும் அரசர்களால் நன்கு பேணப்பட்டார்கள். புலமை யொன்றிலேயே வாழ்நாளைக் கழித்த புலவர்கள் சிலர் தமது வறுமையை அழகாகத் தாம் பாடிய பாடல்களில் சித்தரித்துக் காட்டினர். வறுமை தீரப் பொருள் பெற்ற காலையும் அப் பொருளைத் தம்மிடத்து இரப்பார்க்கு அள்ளி வழங்கினர் புலவர். குமணனைப் பாடிப் பரிசில் பெற்ற பெருஞ்சித்திரனார் தன் மனைவியை நோக்கி, இரப்போர் சுற்றத்தார் முதலிய யாவர்க்கும் தன்னலங் கருதாது தன்னையுங் கேளாது விரும்பியாங்கு வழங்குக எனக் கட்டளை யிட்டமை காண்க. பரிசில் பெற்ற புலவன், பரிசில் பெறக் கருதிய புலவர்களைத் தமக்கு வழங்கிய வள்ளலின்பாற் ஆற்றுப் படுத்தும் அக்கால வழக்கம் புலவர்களின் விரிந்த மனப்பான்மையைக் காட்டுகின்றது. புலவர்கள் வறுமையிலும் முறைதிறம்பாதிருந்தமை, "**செய்யாகூறிக் கிளத்தல் எய்யாதாகின்று எஞ்சிறு சென்னாவே**" என்றமையாற் பெறப்படும்.

தமிழும் தமிழ்க்கலைகளும் வளர்ச்சியுற வேண்டுமாயின் தமிழ்ப் புலவர்களைத் தமிழுலகம் ஆதரிக்கவேண்டும். தமிழ்ப் புலவர்கள் பண்டைக் காலத்துத் தம் முன்னோர்களின் நிலைமையை யடைதல் வேண்டும். இக்காலத் தமிழ்ச் செல்வர்கள் பண்டை வள்ளல்களின் மனப்பான்மையை யடைதல் வேண்டும். பலவேறு கலைகளிலும் அவ்வக் கலைகளிற் றேர்ச்சிபெற்ற புலவர்களை ஆராய்ச்சித் தொழிலிலும் வளர்ச்சித் தொழிலிலும் ஊக்கிக் கவலையற்ற வாழ்க்கை யுடையவராய்த் திகழும்படித் தமிழ்ச் செல்வர்கள் அவர்கட்குப் பேருதவி செய்தல் வேண்டும். இக்காலத்தி லெல்லாத் துறைகளிலும் தமிழ் ஆக்கம் பெற வேண்டியிருப்பதால் அவ் வாக்கத்தினாற் பெரும் பயன் விளைக்கும் கடமைப்பாடுடைய தமிழ்ப் பெருஞ் செல்வரும், ஏனைத் **தமிழுலகமும்** தமிழ்ப் புலவர்களைத் தக்கவாறு பயன்படுத்திக் கொள்ளல் வேண்டும். அப்படிப் பயன்படுத்திக் கொள்வதனால் எக்கலைக்கும் தமிழிலில்லாத நூல் இல்லையென்பது ஏற்பட்டுப் பல்கலை வளனும் தமிழில் பொங்கி மிளிரும். அத்தகைய பெரு நிலையை நமது செந்தமிழ் விரைவில் எய்தும்படித் தமிழ்ப் புலவர்களும் ஏனைத் தமிழரும் இடைவிடாது முயல்வதை வற்புறுத்துவதே இம் மாநாட்டின் குறிக்கோளாகும். வாழ்க தமிழ் மொழி! வாழியர் தமிழர்!!

*எயில் கோடல்

மகா மகோபாத்தியாய. பண்டிதமணி. மு. கதிரேசச்செட்டியாரவர்கள்.

(முற்றொடர்ச்சி : துணர் 21, மலர் 2, பக்கம் 32)

இனி ஒரு நகரத்திற்குச் செயற்கையரணாகிய மலையாதல் கடலாதல் அமைந்திருப்பின் எத்துணை வலிபடைத்த வீரரும் அவற்றைக் கடந்து உட்புகுதல் அருமையாகும். தமிழ் நாட்டு வள்ளல்களுள் ஒருவனாகிய பாரி என்பானுக்குப் பறம்பு மலை அரணாக அமைந்திருந்தபடியால் தமிழ் நாட்டு முடியுடை மூவேந்தரும் தம் படைவீரர்களைக் கொண்டு முற்றுகையிட்டும் அப்பாரியை வெல்லுதல் அவர்க்கு அரிதாயிற்று. அம்மலையரணே பாண்டி நாட்டில் "கொடுங்குன்றம்", அல்லது "பிரான்மலை" என்று இப்பொழுது வழங்கப்படுகிறது. அம்மலையரணைத் தாக்குதல் மூவேந்தர் ஆற்றற்கும் இயலாததாகவே நெடுங் காலந் தம் படைவீரர்களையே அம்மலையரணுக்குப் புறத்தே அரணாக அமைத்து முற்றுகையிட்டனர். இப்படி முற்றுகையிட்டதன் நோக்கம் போக்கு வரத்து நிகழாமைப் பொருட்டும், வெளி நாட்டு உணவு உட்புகுதாமையால் அகத்து வாழ்வோர் வலிகுறைய வேண்டும் என்பதுமாம். இதனை :—

"போக்கு வரத்துப் புரியாமல் வண்பறம்பைத்
தாக்கு படையாற் றனியடைத்தார்—ஆக்கும்
உணவும்பல் பண்ணியமும் உட்புகா தோப்பத்
தணவும் வலியென்னத் தாம்,"

என்பதனால் அறியலாம்.

இங்ஙனம் நெடுங்காலம் வளைத்துக் கொண்டமையால் உணவு சுருங்கவே என் செயலாம்? என்று சூழ்ந்து கிளிகளைப் பயிற்றி வெளியிடத்துள்ள தினைக்கதிர் முதலியவற்றைக் கொண்டுவரச் செய்தும், அப்பறம்பு மலையின் அகத்தே உண்டாய மூங்கில் நெல் தேன் கிழங்கு முதலியவற்றைக் கொண்டும் உயிர் வாழ்ந்திருந்தனர் ;

சுனையுண்டு தேனுண்டு சூழ்ந்து கிளிநல்கும்
தினையுண்டு வேய்நெற் றிரளுண்—டினிய
வருக்கைச் சுளையுண்டு வள்ளிக் கிழங்கு
இருக்கத் தகும் படையோ டென்று"

என்னும் இப்பாடல் இச் செய்தியைத் தெரிவிப்பதாகும்

இந்நிலையிற் புலனழுக்கற்ற அந்தணாளராகிய கபிலர் பாரியின் பெருமை கூறுமுகமாக அம்மூவேந்தரையும் நோக்கி :—

"கடந்தடு தானை மூவிருங் கூடி
உடன்றினிர் ஆயினும் பறம்பு கொளற்கரிதே
... ...
யாமும் பாரியும் உளமே
குன்று முண்டு நீர் பாடினிர் செலினே."

என்று வஞ்சமின்றிக் கூறியதையே வழியாகக் கொண்டு அப்பாரி வள்ளலை வென்றனர் என்ப.

* 28—3—45ல் திருச்சி வானொலியிற் பேசப்பட்டது.

இதனால் வலியமைந்த இயற்கையரணைப் போக்கு வரத்து நிகழா மற் றடைப் படுத்தியும் உணவுப் பொருளில்லாமல் அகத்திருந்தோரை வலியிழப்பித்தும் கொள்ளலாம் என்பது போதரும். செயற்கை யரணாகிய மதிலைக் கோடல் எங்ஙனமெனின், படை வீரரைக் கொண்டு நாவாய் தோணி முதலியவற்றின் மூலம் அகழியைக் கடந்து முதலில் மதிற் பொறிகளை அழித்தும் உயர்ந்த ஏணிகளைச் சார்த்தி மதில் மேலேறியும், வலிய யானைகளைக் கொண்டு மதில் வாயிற் கதவுகளைச் சிதைத்தும் உட்புகுவர் என்பது,

> "கற்பொறியும் பாம்பும் கனலும் கடிகுரங்கும்
> விற்பொறியும் வேலும் விலங்கவும்—பொற்புடைய
> பாணி நடைப்புரவிப் பல்களிற்றூர் சாத்தினர்
> ஏணி பலவும் எயில்"

என்னுமிப் பாடல் தடைப்படுத்தும் பல்வகைப் பொறிகளையும் கடந்து ஏணிபல சார்த்தப் படுதலையும் "அரவும் உடும்பும் போல் ஏறினர் ஏணிபலர்" என்னும் இது அவ் வேணியில் ஏறுவார் செயலை யும் புலப்படுத்துவனவாம்.

இதன்கண் பற்றியதை விடாமைக்கு உடும்பையும் விரைவாகச் செல்லுதற்குப் பாம்பையும் உவமை கூறியிருத்தல் பொருத்தமே. இன்னும் கயிற்றினால் உடும்பைப் பிணித்து உட்பக்கம் எறிந்து மதி லைப் பற்றிக் கொள்ளச் செய்து அக்கயிற்றின் வழியாக மதில் ஏறிச் செல்லுதலும் உண்டு என்பர். "வங்கினைப்பற்றி நீங்கா வல்லுடும் பென்னலானான்" என்று பிடித்த பிடி விடாமைக்குப் பெரிய புரா ணத்தில் உடும்பை எடுத்துக் காட்டியதும் இங்கே கருதத் தக்கது. 'கதிரோடை வெல்களிறு பாயக் கலங்கி, உதிரா மதிலும் உள கொல்" என்பதனால் யானைகளைக்கொண்டு மதிற்சுவர் சிதைக்கப் படுதலையும் அறியலாம். மிக்க வலி படைத்த அரசன் ஒருவன் பகை யரசனது எயிலைக் கொள்ள விரும்பி முற்பட்டானாக, அவ் வரசனது வீரச் செயலைக் குறித்து

> "இற்றைப் பகலுள் எயிலகம் புக்கன்றிப்
> பொற்றேரான் போனகம் கைக்கொள்ளான்—எற்றுங்கொல்
> ஆறாத வெம்பசித் தீயால் உயிர்பருகி
> மாறா மறலி வயிறு"

என்னும் புறத்திரட்டுப் பாடல் ஒன்று அறிவுறுத்தும் பொருள் வியக்கத் தக்கது. இதன் கண், "எயிலகத்துப் புகுதாமல் உண் ணேன்" என்று சூளுறவு செய்த அவ் வரசனது வயிற்றுப்பசி உயிர் களை அளவின்மிக உண்ணும் கூற்றுவனது வயிறு அருமைக்குக் கார ணம் ஆகும் என்று குறிப்பிட்டது நினைந்து இன்புறத் தக்கது.

மதிலகத்திருந்த அரசனுடைய மங்கல முரசு நாடோறும் காலை யில் ஒலிக்கும் வழக்கப்படி ஒலிப்ப அவ் வொலி மதில் முற்றுகையிட் டிருக்கும் அரசன் செவிப்பட்ட அளவில் அவன் சினந்து தன் கை வேலை நோக்கினானாக, அக் குறிப்புணர்ந்த அவன் படை வீரர் "இன்று இம் மதிலைப்பற்றி உட்சென்று மாலைப் பொழுதில் ஆங்குச் சோறுக்குவேம்" என்று வஞ்சினங் கூறி அகப்பையையும் துடுப்பை யும் எடுத்து மதிலகத்தே வீசினர் என்னுங் கருத்துத் தோன்ற,

"காலை முரசம் மதிலியம்பக் கண்கனன்று
வேலைவிறல் வெய்யோன் நோக்குதலும்—மாலை
அடுகம் அடிசிலென் றம்மதிலுள் ளிட்டார்
தொடு கழலார் மூழை துடுப்பு".

என்று புறப்பொருள் வெண்பாமாலை ஆசிரியர் நயம்படக் கூறுவர்.

இதுகாறும் கூறியவாற்ருல் எயில்கோடல் என்பது பகையரசனது மதிலை முற்றுகை யிடுதலாம் என்பதும், மதிலின் அமைப்பு இன்னவென்பதும், அம் மதிலை அழித்து உட்புகுதல் இவ்வாறென்பதும், அதனுல் அகத்திருந்தோனுக்கு நேரும் துன்பம் இன்ன வென்பதும், எயில் கொண்டான் வெற்றிச் சிறப்பு இன்னதென்பதும் பிறவும் பெறப்பட்டனவாம்.

தமிழ்நாடு நாடகக்கலை இரண்டாவது மாநாட்டின்

வரவேற்பு உரை.

இராவ்பகதூர். A. Y. அருளாநந்தசாமி நாடார் அவர்கள்.

தமிழ்நாடு வாழ்க! தமிழ் மொழி வாழ்க! தமிழ் அன்பர்கள் வாழ்க! தமிழ் நாட்டு நாடகக் கலையின் இரண்டாவது மாநாடாகிய இந்த விழாவிற்கு வந்தருளிய தலைவர் அவர்களே! பெரியோர்களே! அன்பர்களே! உங்கள் எல்லோர்க்கும் என் வணக்கமும் வாழ்த்தும் உரியன. உங்கள் வரவு நல்வரவு ஆகுக!

உங்கள் எல்லோரையும் வரவேற்கும் பெருமையினை நான் பெற்றது, எனது புலமையால் அன்று. நாடகத் திறமையால் அன்று. இந்த விழா நடக்கும் நகரத்திற்கும், இந்தச் சங்கத்திற்கும், என்னையும், ஒரு தொண்டனுகச் செய்த பெரியார்கள் இந்தத் தொண்டினையும், என்னிடத்தே ஏற்றியதாலே யாகும்.

அன்பர்களே! உலகில் உள்ள எந்த மொழியிலும் இயலாத ஒரு பெருமை நம் தமிழ் மொழிக்கு உண்டு. அஃது, என்னவென்ருல் இயல், இசை, நாடகம் என்ற மூன்று பிரிவு இம் மொழிக்குத் தோன்றுதொட்டே ஏற்பட்டிருப்பதுதான். அப்படி யிருக்கவும், தமிழில் இசையுண்டா? தமிழில் நாடகம் உண்டா? என்று சில அறிவாளிகள் கேட்பது, ஒரு பிள்ளையைப் பார்த்து, அப்பா! உன் தாய்க்குப் பிள்ளையும் உண்டா என்று கேட்பதுதான். அன்பர்களே! தமிழ்த்தாயின் தலைபோன்றது இயல். வாய் போன்றது இசை. கருத்தை வெளிப்படுத்தும் முகம்போன்றது நாடகம். மற்றும், தமிழ்த்தாயின் உள்ளம் போன்றது இயல். மொழி போன்றது இசை. மெய்யின் நிகழ்ச்சி போன்றது நாடகம். ஒருவர் உள்ளத்தில் இயலும் எண்ணங்களை வாயால் இசைத்துக் காட்டுவதுடன் மெய்யாலும் நடித்துக் காட்டுவதால், அவரிடத்தே இயல் இசை நாடக அமைப்புக்களை நாம் காண்கின்ருேம். அவ்வாறே ஒவ்வொரு நூலிலும் நாம் இந்த உண்மைகளைக் காண்கின்ருேம். இயல், இசை நாடகம் இல்லாத நூலே இல்லை.

அன்பர்களே! உதாரணமாக ஒன்று காண்போம். திருக்குறள் என்ற நூலில், முதற்பகுதியை நாம் படிக்கும்போது, அறத்தின் பெருமையை எடுத்துக் காட்டும் ஒரு நாடகத்தைப் பார்ப்பதுபோல் ஒரு தோற்றம் உண்டாகிறது. நடுப் பகுதியைப் படிக்கும்போது, நல்ல அரசாட்சியின் பெருமையை எடுத்துக் காட்டும் ஒரு நாடகத்தைப் பார்ப்பதுபோல் ஒருதோற்றம் உண்டாகின்றது. அப்படியே மூன்றுவது பகுதியைப் படிக்கும்போது, ஒரு நல்ல மனைவியும் கணவனும் கூடி நடத்தும் இல்லற வாழ்க்கையை எடுத்துக் காட்டும் ஒரு நாடகத்தைப் பார்த்துக்கொண்டிருப்பது போல ஒரு தோற்றம் உண்டாகிறது. இது இயல் நூல்தானே! இதில் இனிய இசையைத் தரும் செய்யுட்களும், நாடகத் தோற்றமும் கலந்து மிளிர்கின்றதை நாம் காணவில்லையா? அன்பர்களே! இவ்வாறே பத்திச் சுவை ததும்பும் இசை நூல்களில் நாம் நாடகத் தோற்றம் காண்கின்றோம் அன்றோ! அன்பர்களே! சில்ப்பதிகாரம் என்ற நாடக நூலில் இயல் இல்லையா? அதன் அடிகளில் தாளத்துடன் பாடப்படும் இசை இல்லையா? அவ்வாறு பாடக்கூடும் சில இடங்களை இங்குள்ள நம் அன்பர் ஒருவர் பின்பு பாடிக் காட்டுவார். அன்பர்களே! தமிழில் உள்ள எந்த நூலும் இயல். இசை, நாடகம் என்ற வகைகளைக் கொண்டிருத்தலை, நாம் ஆழ்ந்து நோக்கின் இனிது அறிந்துகொள்ளலாம்.

அன்பர்களே! நாடகம் என்பது ஒரு மேடையிலோ, ஒரு படத்திலோ வெளிப்பட்டுத் தோன்றுவது என்றாலும் அது இல்லாத இடம் எங்குளது? குழந்தைகளிடத்தில், சிறுவர்களிடத்தில், மாணவரிடத்தில், குடும்ப வாழ்க்கையில் மற்றும் வெளியில் எங்கும் நாம் நாள்தோறும் நாடகத்தையே கண்டு மகிழ்கின்றோம். ஆயினும் அதன் முழு நலனும், நாம் தெருக் கூத்துக்களில், தனி நாடகங்களில், நாடக நற்சபைகளில், ஒளிப்படங்களில் தெளிவாகக் கண்டு மகிழ்கின்றோம். ஆகவே அன்பர்களே! நமது நாடகக் கலைகளும், நாடக நிகழ்ச்சிகளும் ஒழிந்தன என்றோ, தளர்ந்தன என்றோ நாம் மயங்கி அஞ்சவேண்டியதில்லை. நாடகத்தில் நடிக்கும் ஆற்றல், நம்மில் ஆடவர்களிடத்தில், பெண்மணிகளிடத்தில், மாணவர்களிடத்தில், ஏன் சிறுர்களிடத்திலும் இருந்து வருகின்றது. இனி என்றும் அகலாது சிறந்து ஓங்க இருக்கின்றது. சிலப்பதிகாரம் என்பது ஒப்பு உயர்வு அற்ற பெரிய நாடகம் அன்றோ! அதனை, இந்தச் சங்கத்தில், இங்கே படித்த இளைய மாணவர்கள், உள்ளது உள்ளபடியே, நகை, அழுகை சினம் முதலிய எல்லாச் சுவையும் தோன்ற இரண்டு ஆண்டு விழாக்களில் நடித்துக் காட்டினர் என்னில், நம் தமிழ் மக்களிற் பலர் சிறந்த நடிகமணிகளாக விளங்குவதில் ஆச்சரியம் என்ன இருக்கின்றது!

அன்பர்களே! இவ்வாறு நாடகக் கலையிலும், நடிப்பிலும் எந்த நாட்டார்களினும் சிறந்து விளங்கும் தமிழ் நாட்டினராகிய நாம், இன்று இங்கே கூடி எண்ணி முடிப்பன எல்லாம், நமக்கு இசையுண்டா, நாடகம் உண்டா, திறம் பெற்ற நடிகர்கள் உண்டா என்பன போன்றன அல்ல. பின் எவற்றை ஆராய்ந்து முடிக்கவேண்டும்? அன்பர்களே! காலம் செல்லச் செல்ல மக்களின் வழக்க ஒழுக்கங்கள் மாறுபடுவது இயல்பே. அவ்வாறு மாறுபடுங்கால், பண்டுதொட்டு

வரும் நல்ல நெறிகளை விடாமல், புதிதாக வரும் நல்ல நெறிகளை ஏற்பதே, சிறந்த நிலையாகும். ஆகையால், அதற்கேற்றவாறு நம் நாடக நிகழ்ச்சிகளை நாம் மேற்கொள்வது பற்றியும், அத்தகைய நாடக நூல்களைத் தேர்ந்து கொள்வது பற்றியும், நடிக மணிகளைப் போற்றி ஊக்கம் உண்டாக்குவது பற்றியும், நாம் ஆய்ந்து முடிக்கவே கூடியுள்ளோம்.

அன்பர்களே! நாடகங்களால் உலகியலில் பொருபாலும் நிகழும் நிகழ்ச்சிகளை நாம் விளக்கமாக அறிந்து கொள்கின்றோம். உலகத்தின் இயல்பாவது, ஒருவர் நினைப்பது ஒன்று, வந்து முடிவது வேறு ஒன்று. நினைப்பது கை கூடுவது இல்லை. நினைப்பது பல இடையூறுகளையும் தாண்டிக் கை கூடுவதும் உண்டு என்ற இவைகளே யாகும். இவைகளை ஒரு பாட்டில் எடுத்துக் காட்டியவர் ஒளவையார். அப்பாட்டு, **ஒன்றை நினைக்கின் அது ஒழிந்திட்டு ஒன்றாகும், அன்றி அது வரினும் வந்தெய்தும், ஒன்று, நினையாது முன்வந்து நிற்பினும் நிற்கும்,** என்பதாகும். இவ்வாறு எல்லா நாடகங்களின் இயல்புகளையும் ஒரு பாட்டில் சுருக்கிக் காட்டும் திறம் நம் ஒளவைக்கே யன்றி வேறு யார்க்கு வரும்? இவ்வளவுதானா இப்பாட்டின் உயர்வு, இந்த நாடகங்களால் அறிந்துகொள்ளும் நீதிதான் என்ன? நம் நினைவு செயல்களைக் கடந்து நம்மை ஆட்டி வைப்பவர் ஒருவர் உளர். அவர் எல்லாம் கடந்தவர். அவர் பெயர்தான் கடவுள். அவர் துணையால் தான், அவர் அருளால்தான், நாம் நம் வாழ்வுகளில் வரும் இடையூறுகளைத் தாண்டிச் செல்ல முடியும் என்னும் உயர்ந்த உணர்ச்சியும் இங்குக் கூறப்படுகின்றது. அது 'எல்லாம் எனையாளும் ஈசன் செயல்' என்பதே யாகும். இத்தகைய உயர்ந்த உணர்ச்சியே நாடகக் கலையின் முடிமணி ஆக இருத்தல் வேண்டும் என்பதும் நாம் ஆராய்ந்து முடிக்கும் பொருள் ஆகும். ஆயினும் மக்களின் ஒற்றுமையைச் சிதைத்து, சாதிப் பிரிவினையை விளைத்துப் பிளவு உண்டாக்கி, தேச முன்னேற்றத்தைத் தடுக்கும் எந்த நாடகங்களும் இனித் தேவையில்லை என்பதனையும், நாம் உள்ளம் கொள்ளல்வேண்டும்.

அன்பர்களே! இத்தகைய உயர்ந்த கருத்துக்களை உள்ளத்தில் அமைத்து, நாட்டில் வறுமைப் பிணிகளை அகற்றி, நாட்டுப்பற்று, கடவுட்பற்று, ஒற்றுமைகளை நிலை நாட்டி, நாட்டினை உயர்த்தும் திறமை வாய்ந்த பழைய நாடகங்களைத் தேர்ந்தெடுத்தும் புது நாடகங்களைத் தேர்ந்தெடுத்தும் புது நாடகங்களை இயற்றியும் வரும் நமது நாடகப் பேராசிரியர் இராவ்பகதூர் P. சம்பந்த முதலியார் அவர்கள் இத்தகைய நாடகங்கள் வந்து நுழைய உலக வாயிலைத் திறந்து வைக்கும் திறப்பாளர் ஆகிய சிறப்பாளர் வைரமணி அருணசலம் செட்டியாரவர்கள், நாடக இயல்புகளை நாடெல்லாம் உளம் கொள்ளச் சொற்பொழிவுகள் செய்யும் நற்புலச் செல்வர்கள் நாடக வாழ்வினை உயர்த்தி நிலைநாட்ட வல்லவர்களான இந்தச் சபையோர்கள் ஆகிய உங்கள் எல்லோருக்கும் எனது வணக்கமும், வாழ்த்தும் செலுத்தி, உங்கள் எல்லோருக்கும் என் மனமார்ந்த வரவேற்பினைத் தெரிவிக்கின்றேன். வாழ்க நாடகக் கலை. வாழ்க நாடக உலகம். வாழ்க தமிழ் மொழி. வாழ்க தமிழ் உலகம். வாழ்க உலகம் எல்லாம்.

இன்பம்.

மகாமகோபாத்தியாய, பண்டிதமணி. திரு. மு. கதிரேசச் செட்டியாரவர்கள் 5—4—45ல் திருச்சி வானொலியில் நிகழ்ந்த கவியரங்கில் தலைமைவகித்துப் பேசிய

முன்னுரையும்—முடிவுரையும்.

இப்பொழுது கவியரங்கிற் பாடப்படுவன இன்பத்தைப்பற்றிய பாடல்களையாகும். எல்லா வுயிர்களாலும் விரும்பப்படுவது இன்பம். அவ்வின்பம் உள்ளத்திற் றோன்றி உயிரின்கண் மகிழ்ச்சி யுருவின் நிறைந்து நிற்பது. இவ்வின்பத்திற்கு ஏதுவாகவுள்ள பொருள்களும் நிகழ்ச்சிகளும் பலவாகும். உலகத்தில் ஆண்டவன் படைப்பாகவுள்ள இனிய இயற்கைப் பொருள்களின் நிகழ்ச்சிகளும், மக்களால் இதற்கென அமைத்துக்கொள்ளப்படும் செயற்கைப் பொருள்களின் அநுபவங்களும் இன்பத்திற்கு ஏதுவாக வுள்ளனவாம். பலவாகிய இப்பொருள்களை அப்பர் என்னும் பெரியார் "மாசில் வீணையும், மாலை மதியமும், வீசு தென்றலும், வீங்கிள வேனிலும், மூசு வண்டறை பொய்கையும்" எனச் சுருக்கித் தெளிவித்துள்ளார். இங்கே இன்ப நுகர்ச்சிக்கு உரியனவாகக் கூறப்பட்டன ஐந்து பொருள்களாகும். மக்கள் உள்ளம் இன்புறுதற்கு ஏதுவாகிய பொருள்கள் எல்லாம் ஊறும், சுவையும், ஒளியும், நாற்றமும், ஓசையும் ஆகிய ஐம்புல வடிவமாக உள்ளவை. இவ்வைந்தும் முறையே மெய், வாய், கண், மூக்குச், செவி என்னும் ஐம்பொறிகளின் வாயிலாகக் கொள்ளப்படுவன. இவ் வைம் பொறிகளின் வழியாக மனஞ் சென்று அப்புலன்களை நுகர்ந்து உயிர் அறிவின் இயைத்தலால் உயிர் இன்பம் எய்தும். ஐம்புல னுகர்ச்சிக்கும் உப லக்கணமாக இப்பாடலில் ஒவ்வொன்று காட்டப்பட்டுள்ளது. மாசில் வீணை செவிக்கும், மாலை மதியம் கண்ணுக்கும், வீசு தென்றல் உடலுக்கும், வீங்கிள வேனில் அக்காலத்து மலரும் மலர் மணத்தால் மூக்கிற்கும், மூசுவண்டறை பொய்கை வண்டிற்கு விருந்தாகவுள்ள தேனாலும், இனிய நீராலும் வாய்க்கும் இன்பஞ் செய்வன வாதலின் இவவெல்லாம் இன்ப விளைவிற்கு ஏதுக்களாம். இன்ப விளைவிற்குக் காரணமாக வுள்ளவற்றைத் துன்பஞ் செய்வனவாகக் கொள்ளுதலும் உண்டு. இங்ஙனம் கோடற்குக் காரணம் உள்ளத்தின் விபரீதத் தன்மையே யன்றி வேறன்று. சருக்கரை உண்மையில் இனிப்புச் சுவை யுடையதேயாயினும் பித்துப் பிடித்தவன் வாய்க்கு அது கைப்பாக இருக்குமாயின் அக் கைப்பிற்குக் காரணம் அப்பொருளிடத்தின்று; நுகர்பவன் உள்ளத்தில் இருப்பதாகும், ஆகவே இன்ப துன்பங்கள் உள்ளத்தின் நேர்மையும் கோட்டமும் ஆம் என்று கூறுதலும் இழுக்காகாது. இங்ஙனம் ஐம்பொறிகளுக்கும் தனித் தனியாக இன்பஞ் செய்யும் பொருள்கள் பலவாகக் கண்டு கேட்டு உண்டு உயிர்த்து உற்று அறியும் ஐம்புலனும் ஒருங்கு நுகர்தற்கு இடனாகவுள்ளது காதலின்பம் ஒன்றேயாம். இம்மையில் இக்காதலின்பத்தினுஞ் சிறந்ததாக ஒன்று காண்டலரிது. "காதலிருவர் கருத்தொரு

மித்து ஆதரவுபட்டதே இன்பம்" என்பது மூதுரை. ஒரு காதற் கிழவன் பொருள்கருதிப் பிரியுங்கால் ஐம்புலனும் ஒருங்கு நுகரும் இவ்வின்பத்தினும் பொருள் எங்ஙனம் சிறந்ததாகும் எனக் கவன் றுரைத்த தோழிக்கு "அறன்கடைப்படாஅ வாழ்க்கையும் என்றும் பிறன்கடைச் செலாஅச் செல்வமும் இரண்டும் பொருளின் ஆகும்" என்று தலைமகன் உரைத்தானாக, அவ்வாழ்க்கையும் செல்வமும் இக் காதலின்பத்திற்கு அடிப்படை அன்றோ! என்று அவள் கூற மீண் டும் அவ்வறக்கிழவன் ஈத்துவக்கும் இன்பம் எவற்றினுஞ் சிறந்ததாக லின் அதற்கு இன்றியமையாமைபற்றிப் பொருள் விருப்பம் நிகழ்வ தாயிற்று என்றானும். இஃது அறநிலையிற் சிறந்ததோர் இன்ப மாகும். நன்மையும் வழங்கும் வண்மை படைத்தார்க்கு அதுகொண்டு பிறரை இன்புறுத்தலே சிறந்த இன்பமாகும். இதன்மேலும் உள் ளத் துணர்வால் நிகழும் இன்பமும் ஒன்றுண்டு. அது சொற் பொருள் வளமிக்க சிறந்த இலக்கியங்களை உணர்ந்து பயின்று உள்ள மும் அவ்விலக்கியச் சுவையும் இரண்டறக் கலந்து நிற்கும் நிலையில் உண்டாவது. இனி மனம் பொறிவழிப் புறஞ் செல்லாது அகமுக மாக நிலைப்பொருள் ஒன்றைப்பற்றி நிற்ப மெய்யுணர்வு கருவியாக உயிர் எய்தும் இன்பம் இவ் வெல்லாவற்றினும் சிறந்ததாகும் என்பர். இவ்வின்பமே என்றும் அழியாப் பேரின்பமாகும்.

இவ்வின்பங்களைப் பொருளாகக்கொண்டு நண்பர்களாகிய கவி ஞர் பலர் இயற்றிய கவிகள் இப்பொழுது அரங்கேற்றப்படும்.

முடிவுரை.

இதுகாறும் இன்பத்தைப் பொருளாகக்கொண்டு நண்பர்க ளாகிய கவிஞர் பாடிய கவிகளைக் கேட்டோம். சிற்சில பாடல்கள் சொற்பொருள் வளஞ் செறிந்து இன்பஞ் செய்தன. வேறு சில நீண்டு செல்லுதலைக் குறைத்துக் கருதிய பொருள்களைத் தெளிவிக்க முயன்றிருப்பின் நன்றாம். மற்றும் சில, பாடல் முறையைப் பொருட் படுத்தியிருப்பின் இன்பம் செய்திருக்கும். எல்லாப் பாடல்களும் இன்பத்தை மறவாமற் கொண்டுசென்றது பாராட்டத்தக்கது.

கவியுலகம் செவ்விய முறையிற் செழித்து மக்களுக்கு இன்பஞ் செய்கவென வேண்டுகிறேன்.

அறிவிப்பு.

நம் தமிழ்ப் பொழிலுக்குரிய ஆண்டுவரியை அனுப்பி வைக்கும் பொழிலுறுப்பினர்கள் "பொருளாளர், கரந்தைத் தமிழ்ச் சங்கம், கருந்திட்டைக்குடி P. O., தஞ்சாவூர்" என்ற முகவரிக்கு அனுப்பி யுதவ வேண்டுகின்றோம். இதுகாறும் பொருள் அனுப்பாத பொழி லுறுப்பினர்கள் அருள்கூர்ந்து உடனே பொருள் அனுப்பி வைக்கு மாறு வேண்டுகின்றோம். பொருள் அனுப்பாத உறுப்பினர்களுக்கு V. P. வழியே பொழில் அனுப்பப்பெறும் என்பதனையும் அறிவிக்கின் றோம்.

இங்ஙனம்,
பொழிலாசிரியர்
கோ. சி. பெரியசாமிப் புலவர்.

ஆர்நால்டி (Arnoldi).

பண்டித. P. R. மீனாட்சிசுந்தரம் பிள்ளை, M. A.,
கரந்தைப் புலவர் கல்லூரித் தலைவர், தஞ்சை.

மக்கள் வரலாற்றில் அவ்வப்போது இருபாலாராய பல பெரியோர்கள் தோன்றி, சலியாத உழைப்பினாலும் கற்பனைத் திறனாலும் புத்தம் புதிய கருத்துக்களையும் செய்திகளையும் தோற்றி மக்கட்கு வழிகாட்டிகளாய் அமைந்திருக்கின்றனர். அவர்களுள் பலர் புகழும் செல்வமும் மிக்குற்றனர். சிலரோவெனின் அவ்வாறின்றித் தாம் கண்டுபிடித்தவை பிறரால் ஆளப்பட்டு மிக முற்போக்கான வெற்றி பெறும் நிலையில் தம்மால் ஒன்றும் செய்ய இயலாது மறைந்து ஒழிந்திருக்கின்றனர். அன்னார் பெயரும் விரைவில் மக்களால் மறக்கப்பட்டன.

இத்தகைய இரங்கத்தக்க நிலையை அடைந்தவருள் **ஏர்னெஸ்ட் வில்ஹெல்ம் ஆர்நால்டியும்** (Ernst Wilhelm Arnoldi) ஒருவராவர். இவர் 1778, மே 21-ம் நாள் ஜெர்மானிய நாட்டில் ஒரு சிற்றூரில் பிறந்தார். இற்றைக்கு மாணவர்களும் வரலாற்றாசிரியர்களும் மட்டில் அவருடைய பெயரை அறிவர். இருப்பினும் இவருடைய வாழ்க்கையும் முயற்சிகளும் உலகத்து மக்கள் அறிந்து பாராட்டுதற்குரியன. ஒரு சிற்றூரில் வணிகராகத் தன்னுடைய வாழ்க்கையை ஆர்நால்டி துவக்கினார். தன்னுடைய திறமையினால் அதிகமான உலகப் புகழைப் பெறுதற்கு முதலில் ஏற்றவர் அல்லரெனினும் இவரது மனைவியின் அழகு உலகத்தாரால் மிகவும் பாராட்டப்பெற்றது. இவருடைய ஊராகிய **கோதா** (Gotha) விலும் ஜெர்மானிய நாடு முழுதிலும் **'அழகி, லிஸட்டி'** என்று வியந்து பாராட்டப்பெற்றாள். உடற்கூறு வல்லுநரும் கலைஞரும் ஓவியக்காரரும் இவளுடைய அழகே தான் உண்மையான பெண்ணழகு என்று முடிவு கூறினர். பலவகையான இலக்கியத்திலும் வடமொழியிலும் வல்லமை கொண்ட ஜெர்மானிய கவிஞர்பெருமானாகிய **' கதே '** (Goethe) என்பார் வடமொழி நாடகமாகிய சாகுந்தலத்தில் காளிதாசன் சகுந்தலையை வருணித்திருப்பதை வியந்திருக்கின்றார். அந்தப் பெரியாராகிய கதே தன்னுடைய **விமார்** மாளிகையில் **திருமதி. ஆர்நால்டியின்** உருவத்தை வைப்பதற்கு அனுமதி கேட்டாரென்றால் அந்த அம்மையின் அழகு மிகவுயர்ந்தது என்பதை அவர் செயலால் அறியலாமன்றோ ?

ஆர்நால்டி தன்னுடைய 36-வது அகவையில் பொது வாழ்க்கையில் ஈடுபட்டார். அவர் பாடுபட்டு உழைத்த செயல் பெரியதும் நல்லதும் உயர்வுடையதுமாகும். 1814-ம் ஆண்டில் ஜெர்மானிய **வரிக்கழகம்** (German Customs Union) நிறுவுவதற்கு முயற்சித்தார். ஆனால் அந்தக் காலத்து மக்களது மனம் இவரது அறிவு சான்ற முயற்சியை அறியும் தரத்ததாயில்லை. இத்தகைய கழகத்தின் பொருளாதாரக் கொள்கையை மக்கள் அறிந்து ஒப்புக்கொண்டு ஏற்படுத்துதற்கு 20 ஆண்டுகள் கழிந்தன.

முதல் தோல்வியினால் ஆர்நால்டியின் ஊக்கம் குன்றவில்லை. தன்னுடைய தனிப்பட்ட அன்பர்களிடையேயும் பொதுமக்களிடையே

யும் பல திட்டங்கள் அமைத்து வேலை செய்துவந்தார். அவர் வண்ணந்தீட்டும் தொழிற்சாலை ஒன்று நடத்திவந்தார். அக்கால மக்கள் எதிர்பாராத இக்காலத்து முறைகள் பல கையாளப்பெற்று வந்தன. அக்காலத்திலே சீன நாட்டுப் பீங்கான் மிக உயர்ந்த விலையுடைய தாய் எளியோருக்குக் கிட்டா நிலையில் இருந்தது. அதை உணர்ந்து 1816-ல் குறைந்த விலையில் கிடைக்கக்கூடிய பீங்கான் செய்யும் தொழிற்சாலை ஒன்று நிறுவினர். விலை குறைவாயினும் கண்கவர் வனப்புடையதாய் உறுதியுடையதாய் எளிய மக்களும் பெற்றுப் பயன்பெறும் நிலையில் இவரது பீங்கான் அமைந்தது போற்றற் குரிய தாகும்.

அடுத்த யாண்டில் வாணிப முறையைக் கற்றுக் கொடுப்பதற்காக ஒரு கல்லூரியை அவர் தொடங்கினர். ஐரோப்பாவில் இவர் தான் முதன் முதலாக இத்தகைய கல்லூரியைத் தோற்றியவர். இங்கே மாணவர்கள் மிகச் சிறந்த பயிற்சி பெற்றனர்கள். ஒவ்வொரு மாணவரோடும் தனித்தனியே பயின்று அவர்களிடத்தில் எத்தகைய பண்பும் திறமையும் ஆற்றலும் அமைந்துள்ளன என்பதை அறிய ஆர்நால்டி முயன்ருர். கல்லூரி வைத்த அணிமையிலேயே உயர்வான ஊக்கமும் உழைப்பும் கொண்ட மூன்று மாணவரை ஆர்நால்டி இழக்க நேரிட்டது. தீயூழாகவோ அன்றி, துடுமென நிகழ்ந்த காக தாலிய நிகழ்ச்சியாகவோ இருக்கலாம். அம் மாணவரின் பெற்ருேர் ஏழ்மை நிலை அடைந்து தம் மக்களின் பயிற்சி வரியைக் கொடுப்ப தற்கு இயலா நிலை அடைந்தமையே மாணவர் நீங்கியதற்குக் காரண மாகும். இம் மூவருடைய வீடுகள், சொத்து முதலியன தீயினல் அழிக்கப்பட்டமையால் அவர்கள் ஏழ்மை யடைந்தனர் என்று ஆர் நால்டி அறிந்தார். தீப்பிடித்தலால் உடைமையை இழந்து உறுதுயர் கொள்ளும் மக்களுக்கு அந்நிலையில் உதவி செய்யக்கூடியது தீயினின் றும் பொருள்களைக் காப்பதாக உறுதி கூறி, அப்படி ஏதேனும் ஊழ் வலியால் தீப்பிடித்து, குறை நேர்ந்துழி இத்துணை தொகை ஈடாகப் பெற்றுக்கொள்ளலாம் என்று ஒப்பந்தம் செய்து, அதற்காகக் குறிப்பிட்ட கால எல்லைவரை சிறு சிறு பகுதியாக ஒரு தொகை செலுத்திவரும் திட்டமாகிய **எரிநீக்கு உறுதிமுறி** (Fire Insurance) திட்டமே ஆகும் என்று ஆர்நால்டி மக்கட்கு அறிவித்தார்.

எப்பொழுதும் விரிவான பொருளாதாரத் திட்டத்தை யொட்டியே அவரது கருத்துக்கள் இயைந்து வெளிவந்தன. அக்கருத்துக்கள் அவருடைய மனத்துள்ளேயே நீண்ட காலம் இருந்து வேலை செய்துவந்தன. இந்த எரிநீக்கு உறுதிமுறித் திட்டமும் உள்ளத்திலேயே அமைந்திருந்தாலும் அவருடைய மாணவருக்கு ஏற்பட்ட இழப்பே இறுதியாக அத்திட்டத்தை வெளியே இழுத்து வந்திருக்க வேண்டும். அவர் எதையும் எச்சரிக்கையாகப் பலமுறை ஆய்ந்து சீர்தூக்கித் தெளிந்து அதன்பின்னரே செயற்றுறையில் ஈடுபடுவார். எனினும் இத்துணை வேலையும் வியக்கத்தக்க விரைந்த நிலையில் நடைபெறும். அவ்வாறே பலமுறை சிந்தித்து நல்ல அடிப்படை கொண்ட **எரிநீக்கு உறுதிமுறிக் கருவூலம்** (Bank for Fire Insurance) ஒன்றை 1829 ஆம் ஆண்டில் நிறுவினர். இக்கருவூலம் 1938 வரை நின்று நன்கு நடந்து பயன் தந்து வந்தது. ஆனல் ஹிட்லருடைய பொரு

வாதார அமைச்சரான பேரறிஞர் பங்க் (Doctor Funk) இக்கருவூலத்தை வலுக்கட்டாயமாக 1938-ல் அரசியல் கருவூலத்தோடு கலந்து ஒன்றுபடுத்திவிட்டார்.

மீண்டும் ஒருமுறை ஆர்னால்டியின் வாழ்நாளில் நடந்த ஒரு நிகழ்ச்சியினால் அவருடைய செய்கையில் முன்னேற்றங் காணப்பட்டது. 1823-ல் முதன் முதலாக உறுதிமுறிக் கருவூலத்திலிருந்து பணம் பெறுதற்குரிய முறையில் ஒரு குடும்பம் தீயினால் ஊறு கொண்டது. கருவூலத்திலிருந்து பெற்ற தொகையைக்கொண்டு எரிந்த வீடுகளையும் தோட்டங்களையும் கன்றுகாலிகளையும் வாழ்க்கைக்கு இன்றியமையா மற்றைய பயன்படு பொருள்களையும் விலை கொடுத்துக் கொள்வதற்கு அக்குடும்பத்தாருக்கு இயன்றது. ஆனால் இவற்றையெல்லாம் முதலில் நல்ல உழைப்பினாலும் அறிவின் திறத்தாலும் ஈட்டிய குடும்பத் தலைவர் தீக்கிரையாய்விட்டார். அவரது முயற்சியையும் முயற்சியின் பயனையும் விலை கொடுத்து மீண்டும் பெற முடியாது என்றும், உயிர் நீக்கத்தா லேற்படும் இழப்பினை நிரப்புதற்கு எரிநீக்கு உறுதிமுறி மட்டிலும் சாலாது என்பதையும் ஆர்னால்டி இந் நிகழ்ச்சியால் உணர்ந்துகொண்டார்.

சில கிழமைகளுக்குப் பிறகு ஆர்னால்டி பல அரிய கருத்துக்களடங்கிய ஒரு அறிக்கை வெளியிட்டார். அதில் அவர் சிறப்பாகக் குறிப்பிட்ட கருத்து பின் வருவதாகும் :—

“ தலைவனை யிழந்து தளர்ச்சியுற்று வறுமையில் வாடும் களைகணற்ற குடும்பங்களின் ஆதரவற்ற நிலைக்கு மாறாக உறுதிப்பாடு செய்வதன் இன்றியமையாமை மிகக் கட்டாயமான தொன்றாகும். அதே சமயத்தில் எதிர்பாராத சாவு, அனாதைக் குழந்தைகள் உள்ளத்திலும், கணவனை இழந்த கைம்பெண்கள் உள்ளத்திலும் தோற்றுவிக்கும் இடுக்கணையும், நோயையும் போக்குவது நம் கடமையாகும். இதற்கேற்றது ‘வாழ்க்கை உறுதி முறி’ ஒன்றேயாம். (Life Insurance) வாழ்க்கை உறுதிமுறி ஒப்பந்தம் செய்துகொண்ட ஒவ்வொரு மனிதனும் தன்னுடைய உயிருக் கேற்படும் நன்மை தீமைகளில் பங்கு பெறுவோனாக அமைகின்றமையால் கூடியவரை உயிரைக் காப்பதில் கருத்துச் செலுத்தி அவ்வமையத்திலேயே பொருளும் சேமித்து வைக்கின்ற வாழ்க்கை உறுதிமுறித் திட்டம் மிக விரிவாகப் பரவுவதற்கு ஏற்ற வாய்ப்பினைப் பெறவேண்டும்.” இச் சொற்களினின்றும் ஆர்னால்டியின் பண்பு வெளியாகின்றது. அவருடைய உள்ளம், மக்கள் தங்களது அரிய அன்புநிலையங்களாகிய அப்பன், அம்மை, மகன் முதலியோரது சாக்காட்டினால் அடையும் ஆன்ம ஒழுக்க நிலையி லுண்டாகும் இழப்பினை நுண்ணிதின் உணர்ந்திருந்ததும் தன்னோடொத்த நாட்டு மக்களின் நன்னிலைக்காகக் கருத்தைச் செலுத்தியதும் ஆர்னால்டியின் உயர்ந்த பண்பை விளக்குகின்றன. அவர் முதன்முதலாகக் கொடுத்து வாங்கும் உறுதிமுறிச் சங்கத் (Mutual Insurance Company) தை நிறுவுவதற்கு வேண்டிய வெளிப்படையான திட்டத்தை வகுத்துக் கொடுத்தார்.

இந்தத் திட்டமானது அவருடைய காலத்தில் இருந்த சில சங்கங்களால் நடத்தப்பெற்றுவந்த சாவு நிதி (Death Funds) என்ற வகையில் ஓரளவு செயல் முறைக்குக் கொண்டுவரப்பட்டது. ஆனால்

அக்காலத்திய வாழ்க்கை முறைக்கு முற்றிலும் மாறுபட்ட பொருளாதாரத் துறையின் ஒரு கருத்தாக அஃது அமைந்து கிடந்தது என்று நாம் உணரவேண்டும். ஏனென்றால் அது சில அறங்களுக்காக ஏற்பட்ட நிதியோடு அமைதியான வாணிப முயற்சிகளையும் உள்ளடக்கியிருந்தது.

1827-ம் ஆண்டில் வாழ்க்கை உறுதிமுறிக் (Life Insurance Bank) கருவூலத்திற்காக ஆர்நால்டி ஏற்படுத்திய விதிகளை **கோதா கோமகன்** (Duke of Gotha) ஒப்புக்கொண்டார். அதே நாளில் அஃதாவது ஜூலை 9-ஆம் நாள் இந்த உலகத்திலேயே முதன் முதலாகச் செய்யப்பெற்ற வாழ்க்கை உறுதிமுறி பதிவு செய்யப்பெற்றது. லீப்சிக் நகரத்தின் வட்டிக் கடைக்காரராகிய ஹெர் **கிறிஸ்டியன் தியோடார் பேடர்** (Herr Christian Theodor Bader) என்பவர் சாவினை எதிர்த்து அக்காலத்திருந்த நாணய மாற்றுப்படி மூவாயிரம் தாலர் தொகைக்குத் தன்னுடைய வாழ்க்கையை உறுதி செய்துகொண்டார். இதுவே முதன் முதலாக உலகத்தில் எழுதப்பெற்ற வாழ்க்கை உறுதி முறி ஒப்பந்தமாகும்.—(Life Insurance Policy.) முதலில் வேலை மெதுவாகவே நடந்தது. ஆனால் ஈராண்டுகட்குப் பிறகு 1829-ல் தன்னுடைய வாழ்க்கை உறுதிமுறி அலுவல்களுக்கு மட்டும் ஆர்நால்டி ஐந்து எழுத்தாளரை நியமித்து வேலை வாங்குமளவு இத்திட்டம் பரவி சிறந்தோங்கியது. ஆர்நால்டி பிறந்து என்றுமே நீங்காது வாழ்ந்த நகரமாகிய கோதா என்னும் ஊரில் 1841-ம் ஆண்டு, மே 25-ம் நாள் உலக வாழ்வை நீத்தார். அவருடைய கருத்து ஒரு நூறு ஆண்டுகட்கு மேற்பட்டும் இன்றும் அழியாது உலவி வேலை செய்து வருகின்றது. முதன் முதலாக நிறுவப்பெற்ற வாழ்க்கை, தீ நீக்கம் ஆகிய இரண்டின் உறுதிமுறிக் கருவூலம் ஒருவேளை ஹிட்லர் இவ் வுலகத்தினின்றும் ஒழிந்ததனால் மீண்டும் தன்னுடைய வேலைகளைத் தொடங்கி நடத்தி ஆர்நால்டியின் புகழைப் பரப்பி அவரது செயலின் தன்மையை விளக்கிக் காட்டலாம்.

இற்றைநாள் வாழ்க்கையில் ஆயிரக் கணக்கான ஆணும் பெண்ணும் ஒரு சிறு ஜெர்மானிய நகரத்தில் வாழ்ந்த ஒரு ஜெர்மானிய வணிகரின் நல்லெண்ணத்தால் தங்கள் வாழ்க்கைக்கு வேண்டிய இன்றியமையாப் பொருளைப் பெறுகின்றார்கள். அவ்வணிகரது நல்ல கருத்து நூறாயிரக்கணக்கான குடும்பங்களின் வறுமைத் தொல்லையை அகற்றியிருக்கின்றதென்றால் அவரது அறிவின் நுட்பத்தையும் ஆற்றல்சால் ஊக்கத்தின் உயர்வையும் என்னென்போம்! இக்காலத்தில் சிறப்பாகக் கருதப் பெறுகின்ற **பெவரிட்ஜ்** (Bevaridge Plan) திட்டமும் **சமுதாயக் காவல் திட்டமும்** (Social Security Scheme) முதன்முதலாக உறுதிமுறித் தத்துவத்தை விளக்கிக் காட்டி 100 ஆண்டுகட்கு முற்பட்ட மக்களிடையே அதனைப் பரப்புதற்காகத் தன் வாழ்க்கையைச் செலவழித்த ஆர்நால்டியின் ஆழ்ந்த அறிவின் திறத்தை நன்றாக விளக்குகின்றன என்றால் அது மிகையாகாது. ஆகவே வாழ்க்கை உறுதிமுறி எழுதும் அன்பர்கள் ஆர்நால்டி எனும் அருமைப் பெயரையும் எண்ணவேண்டிய கடமைக்கு உட்படுகின்றார்கள்.

தமிழ் வேந்தர்.

வித்துவான். ஔவை. சு. துரைசாமி பிள்ளை அவர்கள்.

தமிழ் வேந்தராவார் சேர சோழ பாண்டியர் எனச் சிறப்பித்துக் கூறப் பெறுபவர். இம் மூவரும் நம் தமிழகத்தே பிறந்து வளர்ந்து சிறந்த பண்டைத் தமிழ்த் தொல்குடி மக்கள். இவர்களைத் தொல் குடிமக்கள் என்றது புனைந்துரை யன்று; முழுதும் உண்மை யுரையே யாகும். "வழங்குவ துள்வீழ்ந்தக் கண்ணும் பழங்குடி, பண்பிற் றலைப்பிரிதலின்று." (955) என்ற திருக்குறள் உரை விளக்கத்தே, ஆசிரியர் பரிமேலழகர், பழங்குடி என்றதற்கு, "தொன்றுதொட்டு வருகின்ற குடி" என்று உரை காட்டித் தம் கருத்தை விளக்குங்கால், "தொன்றுதொட்டு வருதல், சேர சோழ பாண்டியரென்றாற்போலப் படைப்புக் காலந் தொட்டு மேம்பட்டு வருதல்" என்று உரைத்துள்ளார். இவ்வண்ணமே, அழகிய காட்சி யின்பம் பெறும்போதெல்லாம், பண்டைச் சான்றோர் பலவும் இம் மூவரது காட்சியின்பமே நினைந்து வியந்து பாராட்டியிருக்கின்றனர். நகைச்சுவை பொதுளப் பாடும் நற்றமிழ்ச் சான்றோராகிய ஆசிரியர் முடத்தாமக்கண்ணியார், கரிகாற்பெருவளத்தானிடம் பெருவளம் பெற்ற பொருநன் ஒருவன் பெருதான் ஒருவனுக்கு அதனைக் கூற நேர்ந்தபோது, தன் கண்ணெதிர்ப்பட்ட அவன், கொட்டும் பாட்டும் ஆட்டும் குழும இருந்த அக்காட்சி யின்பத்துக்கு மூவேந்தர் ஒருங் கிருக்கும் காட்சியை உவமித்துக் கூறியதாக நாட்டிக்கொண்டு "பீடு கெழு திருவிற் பெரும்பெயர் நோன்றாள், முரசுமுழங்கு தானை மூவ ரும் கூடி அரசவை இருந்த தோற்றம் போலப், பாடல்பற்றிய பய னுடை எழாஅல் கோடியர் தலைவ" என்று பாராட்டுகின்றார்.

இனி நம் தமிழ் மொழிக்கு இன்றியமையாத இலக்கண வரம் பமைத்த ஆசிரியர் தொல்காப்பியர், மன்னர் போர் செய்யுமிடத்து அவரது தானைவீரர் சூடும் அடையாளப் பூவிற்குத் தமிழ் மன்னர் மூவரது அடையாளப் பூவையே விதந்து "வேந்திடை தெரிதல் வேண்டி யேந்து புகழ்ப் போந்தை வேம்பே யாரென வருஉம் மாபெருந் தானையர் மலைந்த பூவும்" என்றும், தமிழ் யாப்புமரபு கூறு மிடத்துத் தமிழ் நாட்டைக் கூறலுற்று, தமிழ் மூவேந்தரின் நினைவு வர, அதனையுங் கூட்டி, "வண்புகழ் மூவர் தண்பொழில் வரைப்பின், நாற்பெய ரெல்லை யகத்தவர் வழங்கும், யாப்பின் வழிய தென்மனார் புலவர்" என்றும் விளம்புகின்றனர். தொண்டைமான் இளந்திரை யனைப் பாடப்புகுந்த கடியலூர் உருத்திரங்கண்ணனார், "அல்லது கடிந்த அறம்புரி செங்கோல், பல்வேற் றிரையனைப்" படருமாறு கூறுவார், "மலர்தலை யுலகத்து மன்னுயிர் காக்கும், முரசுமுழங்கு தானை மூவ" ரென இம் மூவேந்தரையும் சிறப்பித்துள்ளார். மதுரை மருதனிளநாகனார் என்ற புலவர்பெருமான் மூவேந்தரையும் சிவபெரு மான் திருவிழிக்கு ஒப்பாக்கி, சேர சோழர்களை இரு விழிகளாகவும் பாண்டியனை நுதல் விழியாகவும் கூறிச் சிறப்பிப்பார், "பிறைநுதல் விளங்கு மொருகண் போல வேந்துமேம் பட்ட பூந்தார் மாற" (புறம் 55) எனப் புகழ்கின்றார்.

(தொடரும்)